விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 01 வியாழக்கிழமை (13.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 56

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# இடுப்புப்பட்டிகளை அறுத்தெறிந்த மானிப்பாய் இராணுவத்தினர் பெண் போராளிகளைத் தாக்கினர்

## பொது மக்கள் மீதும் தாக்குதல்

(சங்கானை,ஆனைக்கோட்டை,அலுவலக நிருபர்கள்)

**விடுதலைப் புலிகளின் எட்டுப் பெண் போராளிகள் அரசியல் பணிகளுக்காக சண்டிலிப்பாயில் இருந்து மானிப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மானிப்பாய் இராணுவ முகாம் இராணுவத்தினர் அவர்களை கண் மூடித்தனமாகத் தாக்கியதை அடுத்து எட்டுப் பெண் போராளிகள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர்.**

மானிபபாய் மருதடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள இராணுவ முகாம் பகுதியூடாக இடுப்புப்பட்டி அணிந்தவாறு விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் எட்டுப் பேர் சைக்கிளில் பிரயாணம செய்த போது அவர்களை வழி மறித்த இராணுவத்தினர் இடுப்புப் பட்டிகளை அறுத்தெறிந்ததுடன் பொல்லுகள்,இரும்புக்கம்பிகள் கொண்டு பெண் போரளிகளை கண்டபடி தாக்கினர்.

இதேவேளை பெண் போராளி ஒருவரின் தலையில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கத்தியால் தாக்கி படுகாயம் விளைவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முற்பகல் 9மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தின் போது பொது மக்கள் பலரும் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் எட்டுப் பெண் போராளகள் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து சம்பவம் நடை பெற்ற மானிப்பாய் இராணுவ முகாம் பகுதிக்கு நூற்றுக் கணக்கான பொது மக்கள் திரண்டு இராணுவத்தினருக்கு எதிரான கோஷங்களுடன் முகாம் பகுதியில் சூழ்ந்தனர்.

இதன் போது அங்கு மேலதிக இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டதுடன் இராணுவ முகமூடிகளுடன் மக்கள் மீது கண்மூடித்தனமான

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழு முன் அடையாள மறியல்

(தென்மராட்சி)

நேற்றையு தினம் மானிப்பாயில் இடம் பெற்ற சம்பவத்தைக் கண்டிக்கும் பொருட்டு யாழ்.மாவட்ட வெகு ஜன அமைப்புக்களின் ஒன்றியம் இன்று நண்பகல் 12மணிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் முன்பாக அளையாள மறியல் போராட்டத்தினை நடத்தவுள்ளது.

இது தொடர்பாக இன்று முற்பகல் 11மணிக்கு யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் யாழ்.மாவட்ட வெகு ஜன அமைப்புக்களின் ஒன்றியம்,சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,மற்றும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்றும் இடம் பெறவுள்ளதாக ஒன்றியத் தலைவர் சொலமன் சூ.சிறில் தெரிவித்துள்ளார்.(ந-77)

## நீர்வேலி பி.சபை. தலைவர் துப்பாக்கிச் சூட்டில் காயம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பிரதேச சபைத் தலைவரும்,ஈ.பி.டி.பி உறுப்பினருமான பூ.குணசிங்கம் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றிரவு 9மணியளவில் சாவகச்சேரி-நுணாவிலில் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,நேற்றிரவு 9மணியளவில் சாவகச்சேரி-நுணாவிலில் அமைந்துள்ள ஈ.பி.டி.பியின் அலுவலகம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் கதவைத் திறந்து விட்டு வாகனத்தில் இருந்த

(10ம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இராணுவத்தினரால் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கவும், புகைப்படம் பிடிக்கவும் சென்ற யாழ். குடாநாட்டுப் பத்திரிகையாளர்கள் பலர் இராணுவத்தினரின் பலத்த தாக்குதல்களுக்கு இலக்கானார்கள்.

மேற்படி சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிப்பதற்குச் சென்ற பத்திரிகையாளர்கள் பத்திரிகையாளர்களுக்குரிய அடையள அட்டைகளைக காணபித்த போதும்.அதனைக் கிழித்தெறிந்த இராணுவத்தினர் அவர்கள் வைத்திருந்த புகைப்படக் கருவிகளையும் உடைத்தெறிந்துள்ளனர்.

(வ-4,7,123)

## நெடுந்தீவு சம்பவத்திற்கு அமெ.தூதரகம் அதிருப்தி

(கொழும்பு)

ஆயுதங்களைக் கடத்துவதற்கு அண்மையில் விடுதலைப் புலிகள். மேற்கொண்ட நடவடிக்கைகள் அதிருப்தி தருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளதுடன்,விடுதலைப் புலிகள் சமாதானத்தில் காட்டும் ஆர்வம் குறித்தும்,சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூன்று போராளிகள் நெடுந்தீவு கடற் பிரதேசத்தில் தாம் பிரயாணம் செய்த படகை குண்டு வைத்து தகர்த்ததுடன் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்ட சம்பவம் குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அந்த அறிக்கையில்;

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச சேர்ந்த மூன்று போராளிகள் தாம் பிரயாணம் செய்த படகுக்குத் தீ வைத்ததுடன் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.இவர்கள் பிரயாணம் செய்த படகில் விமானத்தைத் தாக்கும் பீரங்கி ரவைகள் மற்றும் குண்டுகள் இருந்ததாக யுத்த நிறுத்க்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளை யுத்தத்திற்கு இழுக்கும் முயற்சியே மானிப்பாய் சம்பவம்

### -பத்திரிகையாளர் மாநாட்டில் இளம்பரிதி-

(யாழ்ப்பாணம்)

எமது இயக்கப் பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதை படையினர் தடுப்பது மனிதவுரிமை மீறல் மட்டுமன்றி யுத்த நிறுத்த மீறலுமாகும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார். நேற்றைய தினம் மானிப்பாயில் புலிப் பெண் போராளிகள் படையினரால் தாக்கப்பட்டமை தொடர்பாக நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கயில்,

இராணுவப் பட்டியோ,இராணுவ உபகரணமோ வேறெந்த இராணுவப் பொருட்களுக்குள்ளும் வரையறுக்க முடியாத சாதாரண துணியினாலானதே பெண் போராளிகள் அணியும் இடுப்புப்பட்டி எனவே பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதை படையினர் தடுப்பது மனித உரிமை மீறல் மட்டுமன்றி பாரிய யுத்த நிறுத்த மீறலுமாகும்.எமது தரப்பால் யுத்த நிறுத்த மீறல்கள் மேற்கொள்ளப் படுகிறது எனகருதும் பட்சத்தில் அதனை யுத்த நிறுத்தக் கண்காணிப்பு

(10ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளது கண்காணிப்புக்குழுத் தலைவர் அறிவிப்பு

### யாழ்.இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒப்புக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிப்பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணிவதைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தினருக்கு எந்த அதிகாரமும் இல்லை.அது தொடர்பாக யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிற்கு முறைப்பாடு செய்வதறகு மட்டுமே அவர்களுக்கு உரிமையுண்டு.

இவ்வாறு யாழ்.மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஒலேபுரண்டம் தெரிவித்தார். கண்காணிப்புக்குழு-விடுதலைப்புலிகள்-படை அதிகாரிகள் ஆகிய முத்தரப்பினர் கலந்து கொண்ட பேச்சு வார்த்தை நேற்று மாலை 3.30மணியளவில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடை பெற்றது.இதன் போதே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேற் க்ண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்;

• நேற்றைய தினம் மானிப்பாயில் பெண் போராளிகள் படையினரால் தாக்கப்பட்டதும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பொது மக்கள் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளானதும

(10ம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புக்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)


மானிப்பாய் முகாம் பகுதியில் வைத்து விடுதலைப் புலிப் பெண் போராளிகள் எட்டுப் பேரும்,பொது மக்களும் இராணுவத்தினரால் கண்மூடித்தனமான முறையில் தாககப்பட்ட சம்பவம் குறித்து பல் வேறு பொது அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழீழ சர்வதேச மாணவர் பேரவை, யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்பன தமது கண்டன அறிக்கைளை வெளியிட்டுள்ளன. (ம)











முதலாவது படத்தில் இந்திய வீரர் டெண்டுல்கர் ஆட்டமிழக்கும் காட்சியையும்,
இரண்டாவது படத்தில் கென்யா வீரர் உடும்பே ஆட்டமிழந்த மகிழ்வில் தென்னாபிரிக்க வீரர்கள் கிப்ஸ் மற்றும் பௌச்சர்.




## இன்றைய ஆட்டங்கள்

**மேற்கிந்தியத் தீவுகள் எதிர் நியூசிலாந்து**
(சென்ட் ஜோர்ஜ் பார்க் மைதானம்)

**சிம்பாப்வே எதிர் இங்கிலாந்து**
(ஹராரே மைதானம்)

## டெண்டுல்கர் முதலிடம்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளில் விளையாடி அதிக ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமை இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பெற்றுள்ளார்.

நெதர்லாந்து அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற போட்டியில் 52 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் அவர் முதலிடத்திற்கு வந்துள்ளார். இதன் படி உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியில் 1111 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

பாகிஸ்தானிய வீரர் யாவிட் மியான்டாட் 1083 ஓட்டங்களுடன் 2ம்இடத்திலும், 3ம் இடத்தில் விவ்வியன் றிச்சாட்டும், 4ம் இடத்தில் ஸ்ரீவ்வோவும் உள்ளனர்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### தென் ஆபிரிக்கா எதிர் கென்யா

### கென்யா

38 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 140 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழப்பு |
|---|---|---|---|
| கே.ஓ ஓரினோ | 01 | | Run Out |
| ஆர்.டி சாக் | 60 | | Run Out |
| பி.ஜே பட்டேல் | 01 | பொலக் | C |
| எஸ்.ஏ றிகோலா | 03 | பொலக் | C |
| எச்.எஸ் மோடி | 09 | போஜே | C |
| எம்.ஓ உடும்பே | 16 | குளுஸ்னர் | C |
| ரி.எம் ஒடோயா | 22 | நித்தினி | C |
| சி.ஓ ஒபூயா | 00 | குளுஸ்னர் | L B W |
| எம்.எ சுஜி | 00 | குளுஸ்னர் | C |
| பி.ஜே. ஒங்கொண்டோ | 13 | குளுஸ்னர் | C |
| ஏ.வை. ஹறிம் | 00 | | Not Out |

உதிரிகள் –15

### தென் ஆபிரிக்கா

21.2 ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 142 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழப்பு |
|---|---|---|---|
| கிப்ஸ் | 87 | | Not Out |
| கேரிஸ்ரன் | 52 | | Not Out |


உதிரிகள் –03

### பந்து வீச்சு -தென் ஆபிரிக்கா

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| பொலக் | 6 | 15 | 2 |
| நித்தினி | 7 | 14 | 1 |
| கலீஸ் | 3 | 23 | - |
| லாங்வெல்ட் | 5 | 24 | - |
| போஜே | 9 | 44 | 1 |
| குளுஸ்னர் | 8 | 16 | 4 |

### பந்து வீச்சு - கென்யா

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| எம்.எ. சுஜி | 4 | 21 | - |
| ரி.எம் ஒடோயா | 6 | 34 | - |
| ஏ.வை. ஹறிம் | 2 | 17 | - |
| சி.ஓ ஒபூயா | 5 | 32 | - |
| எம்.ஓ உடும்பே | 2 | 21 | - |
| பி.ஜே. ஒங்கொண்டோ | 2.2 | 17 | - |



ராகுல் டிராவிட் ஆட்டமிழக்கும் காட்சி

இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து
**வலம்புரி**
நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள்
பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?
2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?

உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி
கிரிக்கெற் பரிசுப் போட்டி
**வலம்புரி**
இல 15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

உங்கள் விடையுடன் தவறாது
இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003
முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தே.அ.அ.இல : ..............................
கையொப்பம்: ..............................
அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி
மார்ச் 15, 2003

## நபிகள் நாயகம் வழிநின்று சமாதானத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும்
### பிரதமர் ரணில் ஹஜ் வாழ்த்துச் செய்தி

(கொழும்பு)

இலங்கையில் உள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு காணப்பட்டு நிரந்தர சமாதானம் நாட்டில் மலரும் என்ற எதிர்பார்ப்புடனே ஹஜ் பெருநாளை முஸ்லிம்கள் கொண்டாடுகின்றனர்.

புனித ஹஜ் பெருநாளை ஒட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாழ்த்துச் செய்தியில்,

நபிகள் நாயகம் தனது வாழ்நாளை சமாதானத்திற்காகவே அர்ப்பணித்துள்ளார். அவரது பாதக் கமலத்தை தொழும் முஸ்லிம் மக்களும் நாட்டின் நிரந்தர சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகளாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானத்திற்கு முஸ்லிம்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அனைத்து மக்களும், அரசியல் கட்சிகளும் தமக்கிடையேயுள்ள போட்டி பொறாமையைக் களைந்து அனைவரும் ஓரினம் ஓர்நாடு என்ற கொள்கையுடன் வாழவேண்டும்.



இதற்கான அறிகுறிகள் தற்போது தென்படுகின்றன. இன்னும் ஓரிரு வருடங்களின் பின்னர் இது யதார்த்தமாகிவிடும் என பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## மீளக் குடியமரும் மக்களுக்கு கண்ணிவெடி விழிப்புணர்வு

(திருகோணமலை)

திருகோணமலையில் மக்கள் மீளக்குடியமரக் கூடிய இடங்களில் கண்ணி வெடிகள் இருப்பதை உறுதிசெய்யக் கடற்படை மற்றும் இராணுவத்தினர் மறுத்துள்ளதையடுத்து மக்கள் குடியமர வேண்டிய பகுதிகளில் நேரடியாக சென்று பார்வையிட்ட வெண்புறா நிறுவனத்தினர் மக்களுக்கு கண்ணி வெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட வெண்புறா நிறுவன இணைப்பாளர் அன்ரனி,

மக்கள் மீளக் குடியமரப் போகும் இடங்களில் கண்ணிவெடிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்ய மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் உதவியைக் கோரவுள்ளோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பெருமளவு கண்ணிவெடிகள் படையினரால் புதைக்கப்பட்ட போதும் அதன் பாதிப்பு மிகவும் குறைவடைந்தமைக்கு காரணம் கண்ணிவெடி பற்றிய விழிப்புணர்வுகளையும் அதன் விளைவுகளையும் மக்கள் நன்கு அறிந்திருந்தமையே என்று தெரிவித்தார். (உ-10)

### விசேட குறுகிய கால வியாபாரப் போட்டி
## ஜனசக்தி காப்புறுதி நிறுவன யாழ். அலுவலகம் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

வரையறுக்கப்பட்ட ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வருடாந்த வெகுமதி வழங்கும் வைபவத்தை ஒட்டி அண்மையில் நடத்தப்பட்ட விசேட குறுகிய கால புதிய வியாபாரப் போட்டியில் ஜனசக்தி நிறுவனத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் அகில இலங்கை ரீதியில் அதி கூடிய முதல் தவணைக் கட்டணத்தை சேகரித்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

அத்துடன், பிரேரணைப் பத்திரங்களின் சேகரிப்பில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இதன் மூலம் மிகச் சிறந்த முறையில் தனது செயற்பாட்டை வெளிப்படுத்தியுள்ள அலுவலகம் என்ற பாராட்டை யாழ். ஜனசக்தி அலுவலகம் பெற்றுள்ளது. (உ)

### நீதி மன்றத்திற்கு டிமிக்கி விட்ட
## 5 லட்சம் பேரைத் தேடி வலை விரிப்பு

(கொழும்பு)

நீதிமன்ற பிடியாணைக்குத் தப்பி நாட்டில் உலவும் 5 லட்சம் பேரை கைது செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்த ராஜா பணிப்புரை விடுத்துள்ளார்.

இவர்களை கைது செய்து நீதிமன்றங்களில் ஆஜர் செய்யுமாறு ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் குற்றங்களை தடுப்பதற்கான விசேட பிரிவு (அன்ரி, கிறைம் ஸ்கொட்) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தமது பொலிஸ் பிரிவில் பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளவர்களின் விபரங்களின் அடிப்படையில் அவர்களைத் தேடிக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

இவ்வாறான கைதுகள், நீதிமன்ற ஆஜர்கள் தொடர்பான குற்றங்களை தடுப்பதற்கான விசேட பிரிவுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பாதுகாப்பு படையிலிருந்து தப்பி வந்தவர்கள் என்றும்,

சிலர் இரண்டு அல்லது மூன்றுக்கும் அதிகமான பிடிவிறாந்துக்கு உட்பட்டவர்கள் எனவும்,

சிலர் கொலைகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. (உ-3)

## சமுர்த்தி வங்கி இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக பிரிவுக்கான முதலாவது சமுர்த்தி வங்கி இன்று கொழும்புத்துறை புங்கங்குளம் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மு.ப 10 மணிக்கு யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப.திலகநாயகம் போல், தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், யாழ் சமுர்த்தி உதவி ஆணையாளர் என்.சிவபாதம், உதவி அரசாங்க அதிபர் வீ.வீரகத்திப்பிள்ளை, யாழ். ப.நோ.கூ.ச தலைவர் சி.வி.கே.சிவஞானம், வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் ஆகியோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்கவுள்ளனர். (உ-7)

### வென்னப்புவவில் விழுந்த கல்
## வியாழக் கிரகத்தில் இருந்து விழுந்திருக்கலாம்

(கொழும்பு)

வென்னப்புவ பட்டிருப்புப் பகுதியில் கடந்த வியாழனன்று வானில் இருந்து விழுநத பொருள் விண்கலம் ஒன்றின் பகுதி அல்ல.

இது எரிநட்சத்திரம் ஒன்றின் பகுதியாக இருக்கலாம் என்று கொழும்புப் பல்கலைக்கழக பௌதீகவியல் உயர் பீட பேராசிரியர் சந்தன ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை,இவ்வாறு வீழ்ந்த மர்மப் பொருள்அண்மையில் வெடித்துச் சிதறிய கொலம்பியா விண்கலம் ஒன்றின் பகுதியாக இருக்கலாம் என ஊகிக்கப்பட்டது.

இது தொடர்பாக பேராசிரியர் மேலும் கருத்து வெளியிடுகையில்,இப்பொருள் பூமியில் வீழ்ந்த போது வெடித்து சிதறியிருக்கலாம்.

இது ஒரு 'கல்ரக' எரிநட்சத்திரத்தின் துண்டாக இருக்க வேண்டும். உயர் அழுத்தம் காரணமாக வளிமண்டலத்திற்குள் நுழைந்த சமயமே வெடித்துள்ளது.

வியாழக்கிரகத்திலேயே இத்தகைய கற்கள் இருக்கின்றன.

இது தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழக பௌதகவியல் பீடம் மேலும ஆய்வுகளை நடத்தி வருகிறது என்றார். (உ-10)

## புனர்வாழ்வு உபகுழு கூட்டம் ஒத்திவைப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் இன்றும் நாளையும் நடைபெறவிருந்த புனர்வாழ்வு புனரமைப்பு உபகுழுக் கூட்டம் இம்மாதம் 27ஆம் 28ஆம் திகதிகளுக்கு பின்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடந்து முடிந்த பேர்ளின் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வன்னிக்குத் திரும்பி பேச்சுவார்த்தை தொடர்பான விபரம் குறித்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு விளக்கம் அளித்த பின்பே இக் கூட்டம் நடைபெறவேண்டும் என்பதற்காகவே கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (வ)

### நூல் நிலைய திறப்பு விழாவைப் பிற்போடுக!
## சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மாநகர முதல்வருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

சிங்களப் பேரினவாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்தின் புனரமைப்பு மற்றும் ஏனைய வசதிகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அரைகுறையாக அதனைத் திறக்க முற்படுவது எமது இனத்திற்குச் செய்யும் துரோகமாகும். எனவே நூலகத் திறப்பு விழாவை பிற்போடுமாறு கோருகிறோம்.

இவ்வாறு கோரும் கடிதம் ஒன்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் யாழ். மேஜர் செல்லன் கந்தையனுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்களப் பேரினவாதிகளால் அழிக்கப்பட்ட யாழ். பொது நூலகம் அரைகுறையாகப் புனரமைக்கப்பட்டு முழுவேலைகளும் பூர்த்தியடையாத நிலையில் திறக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றமை யாழ்ப்பாணத்திலுள்ள கல்விமான்களையும், பல்கலைக்கழக மாணவர்களையும், பாடசாலை மாணவர்களையும் விசனமடையச் செய்துள்ளது.

உலகில் எங்கும் பெறமுடியாத அரியபல நூல்களையும் வரலாற்று ஆவணங்களையும் கொண்டு விளங்கிய நூல் நிலையம் அழிக்கப்பட்ட செய்தி ஒவ்வொரு தன்மானத் தமிழ்மகனின் இதயத்திலும் ஆறாத வடுவாகவே இருந்து வருகின்றது.

இவ்வாறு அழிக்கப்பட்ட நூல் நிலையத்தினை அரைகுறையாகத் திறந்து வைக்க முற்படுவது எமது இனத்திற்குச் செய்யும் பாரிய துரோகமாகும். நூல் நிலையத்தினை புனரமைக்கும் திட்டத்தின்படி பல செயற்பாடுகள் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லை.

*50 சதவீதமான புத்தகங்கள் இல்லாத நிலையில் திறந்து வைக்கப் படவுள்ளது.

*நூல் நிலையத்திற்கான மின் விநியோகத்திற்கான ஜெனரேட்டர்கள் பொருத்தப்படவில்லை.

*நூல் நிலையத்தினைக் கணனி மயப்படுத்துவதற்கான திட்டம் முழுமையாக கைவிடப்பட்டுள்ளது.

*மாடிப்படிகளுக்கு செல்வதற்கான "மேலுயர்த்தி" பொருத்தப்படவில்லை.

*தண்ணீர்த் தாங்கி அமைக்கப் படவில்லை.

*நூல்நிலைய கட்டடங்களிற்கிடையில் செல்லுவதற்கான நடைபாதைக் கூரைகள் அமைக்கப்படவில்லை.

*நூலகத்தில் கடமையாற்றுவதற்கான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு திறைசேரி இன்னமும் அனுமதி வழங்கவில்லை.

*நூலகத்திற்குரிய தேநீர் சாலை, மலசல கூட வசதிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்நிலையில் நூலகத்தினை திறப்பதானது வெறுமையான ஓர் கட்டடத்தினை திறந்து வைப்பதற்கு ஒப்பானது. இவ்வாறு வெறும் கட்டடத்தினை திறந்து வைப்பது சிங்களப் பேரினவாதிகளால் நூல் நிலையம் எரிக்கப்பட்டதற்கு ஒப்பான செயலாகும்.

சுமார் 2 கோடியே 10 லட்சம் ரூபா பெறுமதியான வேலைகள் இன்னமும் பூர்த்தியடையாத நிலையில் இக்கட்டடத்தினை திறந்து தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டாம்.

புத்தகங்கள் அற்ற வெறும் கட்டடமாக நூல் நிலையம் அமைந்து விடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே திறப்பு விழாவை முழு வேலைகளும் பூர்த்தியாகும் வரை பிற்போடுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இல்லையேல், எதிர்வரும் 14ஆம் திகதி மாணவர்களும், மக்களும் இணைந்து நூல்நிலையம் முன் மறியல் போராட்டம் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதனை மனவருத்தத் துடன் அறியத்தருகின்றோம் என்றுள்ளது. (து)






ஸ்கிறிப் நெற் நிறுவனம் யாழ். சிற்றி கோலில் நடத்திய திரைக்கலை இரண்டாம் கட்டப் பயிற்சி நேற்றுடன் பூர்த்தியானது. இந்நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களை மேலே காணலாம்.

படங்கள் : க.பவன்

# பின்லேடனின் புதிய ஒலிநாடா

# ஈராக் மீதான தாக்குதலுக்கு மேலும் ஒரு ஆதாரம்

(வொஷிங்டன்)

ஈராக்மீது தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு அமெரிக்கா பகீரதப் பிரயத்தனங்கள் மேற் கொண்டுவரும் இவ்வேளையில் ஓஸாமா பின்லேடன் விடுத்துள்ள ஒலிநாடா செய்தியொன்று ஐ.நா. வட்டாரங்களில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஈராக் மீதான தாக்குதலுக்கு இந்த ஒலிநாடாச் செய்தி மேலும் ஒரு ஆதாரத்தை அமெரிக்காவுக்கு வழங்கியிருப்பதாகக் கருதப் படுகின்றது.

சாத்தானின் நேசர்களுக்கு எதிராகப் போராட முஸ்லிம் களை முன்வருமாறு கோரி அல்கெய்டா தலைவரும் அமெரிக்க வர்த்தகமையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்குப பொறுப்பானவர் என்று குற்றஞ் சாட்டப் படுபவருமான ஓஸாமா பின்லேடன் விடுத்திருக்கும் ஒலிநாடாவானது ஈராக்கிய நெருக்கடியில் முக்கிய இடத்தை வகிக்கப்போகிறது என ராய்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித் துள்ளது.

கட்டாரில் அமைந்துள்ள அல் ஜஸீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பின் ஓடியோ நாடா வினை ஈராக்கிற்கும் அல்கெய்டா வுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதற்கான ஆதார மாக அமெரிக்கா எடுத்துக் காட்டத் தொடங்கியுள்ளது. ஈராக்மீதான தாக்குதலுக்கு பொருத்தமான ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்கும் அமெரிக்காவுக்குஇந்த ஓடியோ நாடா மிகவும் பயனுள்ளதாக விருக்கும் என்று கருதப் படுகின்றது.

அமெரிக்கா மீது பயங்கரவா திகள் திடீர்த்தாக்குதல்களை நடத்தக்கூடுமெனவும், அவை கதிர் இயக்கம், ஆபத்தான உயிரிகள், அல்லது இரசாயன வாயுக்களைக் கொண்டவை யாகவுமிருக்கலாம் என்பதால் பாதுகாப்பான அறைகளில் புகுந்து அவைகளுக்குள் கசிவுகள் புகாதவகையில் பார்த்துக் கொள்ள பிளாஸ்டிக் சீற்றுக் களையும், டேப்புக்களையும் தயாராய் வைத்திருக்கும்படி அமெரிக்க மக்களுக்கு அறிவுறுத் தல் விடுக்கப்பட்டுள்ள நிலை யில் இந்தப் புதிய ஓடியோ நாடாபற றிய தகவல் மேலும் அச்சத்தை அதிகரிதுள்ளது.

சதாமைப் பதவியிலிருந்து அகற்றுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள அதிபர் புஷ் பயங்கரவாதி களுக்கு சதாம் ஹுசைன் பேரழிவு அயுதங்களை வழங்கி விடக் கூடும் என்றும் அதனால் அவரை ஆயுதக் களைவுசெய் விப்பது அவசியமாகும் என்று வலியுறுத்திவருகிறார்.

பின்லேடன் விடுத்துள்ள புதிய ஒலிநாடா அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள் மீது அவர்கள் முன் எப்போதுமே அனுபவித்தி ராத வகையில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதின் அவசியத்தை வலியுறுத்தியுள் ளது.

''முஸ்லிம்களின் பழைய தலைநகர் மீது தாக்குதல் நடத் துவதற்கு எடுக்கப்பட்டு வரும் ஆயுத்தங்களைக் கவலையோடு அவதானித்துவருகின்றோம். பிசாசின் நண்பர்களை எதிர்த்துப் போராடுங்கள், வெற்றி இறை வனிடமிருந்து மட்டுமே கிடைக் கும் என்பதை நினைவுபடுத்து கிறேன்'' என்று அந்த நாடாவில் பின்லேடன் கூறியுள்ளார்.

ஜோர்டான், மொறக்கோ, நைஜீரியா, பாகிஸ்தான், சவூதி அரேபியா. ஜேமன் ஆகிய நாடுகள் விடுவிக்கப்பட வேண் டிய நாடுகள் என நாடாவில் குறிப் பிடப்பட்டுள்ளன.

அல்கெய்டாவும் ஈராக்கியரும் நெருக்கமாக செயல்பட்டுவரு கிறார்கள் என்பதை இந்த ஒலி நாடா உறுதிப்படுத்துவதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சு பேச்சாளர் றிச்சாட் பவுச்சர் கூறியுள்ளார்.

கட்டாரிலுள்ள அல்ஜஸீரா தொலைக்காட்சிச்சேவை அல் கெய்டாவுக்கு ஆதரவாக செயல் பட்டு வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது. (பி)

## சோதனைகளை தொடர ஆதரவு

(நியூயோர்க்)

ஈராக்கின் ஆயுதசோதனை களை தொடர்ந்து நடத்துவதற்கு ஐ.நா. பாதுகாப்புசபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் 4 நாடுகளைத் தவிர ஏனைய நாடு கள் அங்கீகாரம் வழங்கியிருப் பதாக ஜேர்மன் அரசாங்கம் தெரிவித்துள்ளது

ஐ.நா.பாதுகாப்புச்சபையில் 15 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இதில் பிரிட்டன், ஸ்யென் மற்றும் பல்கேரியா ஆகிய நாடுகள் அமெரிக்காவிற்கு ஆதரவு வழங்குகின்றன.

ஆயினும் ஈராக்கில் சோதனை கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று தங்களுடைய தீர்மானத்தை மாற்றிக் கொள்ளப் போவதில்லை என்றும் ஜேர்மன் கூறியுள்ளது. (பி-9)

## 103 வயது மூதாட்டி கண்தானம்

(புதுடில்லி)

கோவை வெள்ளமடை அருகே காளிபாளையம் கிராமத் தைச் சேர்ந்த 103வயதான கப்பினியம்மாள் தனது கண் களைத் தானம் செய்துள்ளார்.

கப்பினியம்மாள் தனது இரு கண்களையும் தானமாகக் கொடுப்பதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருந்தார். கடந்த முதலாம் திகதி சனிக் கிழமை அ்வர் காலமானதை யடுத்து, அன்பு இல்லத்தின் சார்பில் கோவை சங்கரா கண் மருத்துவமனைக்குத் தகவல் கொடுக்கப்பட்டதையடுத்து கப்பினியம்ம்ாள் விருப்பப்படி அவரது கண்களை மருத்துவமனை யினர் பெற்றுச் சென்றனர். (பி)

# மெக்காவில் நெரிசலில் சிக்கி 14 பேர் உயிரிழப்பு

(ரியாத்)

சவூதி அரேபியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சாத்தா னிற்கு கல்லெறியும் நிகழ்வின் போது நெரிசலில் சிக்கி 14 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது.

நேற்று முன்தினம் நிகழ்வின் போது பெருமளவு யாத்திரீகர்கள் மெனாவில் திரண்டிருந்ததாகவும் இதனால் நெரிசல் ஏற்பட்டிருந்த தாகவும் ஹஜ் பாதுகாப்பிற்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித் தார்.

இந்தியா, பாகிஸ்தான், எகிப்து, ஈரான் மற்றும் ஜேமனை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்ததாகவும், இவர்களில் 6பேர் பெண்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அத்துடன் ஜனாசாக்களில் சில இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்றும் அவர் சொன்னார்.

ஜமராத் பாலத்தில் இடம் பெறும் சாந்தானிற்குக் கல்லெ றியும் நிகழ்வின் போது நெரிசல் ஏற்படுவது வழக்கமாகும் இதற்கு முன்னரும் நெரிசலில் சிக்கி யாத்திரீகர்கள் உயிரிழந்த சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன. (பி-9)



**ஆஸியநாடுகளிலிருந்து புனித யாத்திரை மேற்கொண்டு மெக்கா சென்ற இஸ்லாமிய பெண் யாத்திரீகர்கள் கடந்த 11ஆம் திகதி மெனாவில் சாத்தானுக்குக் கல்லெறியும் சடங்கினை நிறைவேற்றக் கூடியிருந்ததைப் படத்தில் காண்கிறோம். சாத்தானின் அடையாளமான தூணின் மீது உலகெஙகுமிருந்து வந்திருந்த 20லட்சம் முஸ்லிம கள் இந்த வைபவத்தில கலந்து கொண்டனர்.**

## உலக அமைதிக்கு அமெரிக்காவே பாரிய அச்சுறுத்தல்

### பிரிட்டிஷ் மக்கள் கருத்து

(லண்டன்)

உலக சமாதானத்திற்கு ஈராக் பாரிய அச்சுறுத்தலாக இருக்க வில்லை. ஆனால் அமெரிக்காவே அச்சுறுத்தலாக இருக்கிறது எனவும் பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் கருத்துத் தெரிவித்துள் ளனர்.

பிரிட்டனில் நடத்தப்பட்ட கருத் துக்கணிபொன்றிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

எவ்வாறாயினும் ஈராக்மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள் ளப் படுவதையே பெரும்பாலான பிரிட்டிஷ் மக்கள் விரும்புகின் றனர் என்று கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

பாரியஅழிவுகளை ஏற்படுத் தக் கூடிய ஆயுதங்கள் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனிடம் இருப்பதாக பத்தில் 7 பிரிட்டிஷ் பிரஜைகள் நம்புவதாகவும் கருத்துக் கணிப்பில் தெரியவந் துள்ளது. (பி-9)

## யுத்தத்தைத் தவிர்க்க பிரான்ஸ் புதியயோசனை

(நியூயோர்க்)

ஈராக் மீதானயுத்தத்தை தவிர்க் கும் நோக்கில் புதியயோசனை ஒன்றை பிரான்ஸ் முன்வைத்துள்ளது.

ஈராக்கில் உள்ள ஐ.நா. பாது காப்புப் பிரிவுகளை மும்மடங்காக விஸ்தரிப்பதன்மூலம் ஆயுத சோதனை நடவடிக்கைகளை ஊக்குவித்து யுத்தத்திற்கு மாற் றீடான வழிமுறைகளை முன்னெ டுத்துச் செல்லமுடியும் என்று பிரான்ஸ் கூறியுள்ளது.

பிரான்ஸ் சமர்ப்பித்துள்ள யோசனைத் தீர்மானம் ஒன்றாக உருமாற முடியுமா என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஈராக்மீதான அமெரிக்காவின் உத்தேச யுத்தத்திற்கு பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, மற்றும் சீனா ஆகிய நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை தெரிந்ததே. (பி-9)

## முதியவர்களை பராமரிக்கும் இயந்திர மனிதன்

(டோக்கியோ)

பராமரிக்க ஆளில்லாத வயோ திபர்களுக்கு ஆறுதல் அளிக்கும் 'ரோபோ' இயந்திர மனிதனை ஜப்பானிய விஞ்ஞானிகள் வடி வமைத்துள்ளனர்.

ஜப்பானில் முதியவயதை யடைகின்றவர்கள் கவனிப்பாரற்றுப் போகும் நிலை அதிகரித்து வரு வதால் விஞ்ஞானிகளின் கவனம் இந்த இரும்புமனிதனை உருவாக கும் முயற்சியில் இறங்கச் செய் துள்ளது.

ஒரு குழந்தை அளவிலான இந்த இயந்திர மனிதன் ஒரு தாதி யைப்போலவும், ஒரு நண்பனைப் போலவும், பாதுகாவலன் போல வும் பல செயற்பாடுகளைச் செய்ய வல்லது. இந்தக் கம்பியூட்டர் மனிதன் விரைவில் ஜப்பானிய மார்க்கட்டில் விற்பனைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

'வாக்கமாறு' என்றழைக்கப் படும் இந்த இயந்திர மனிதன் ஒரு வீட்டை 24மணிநேரமும் காவல் செய்துகொள்ளும், ஏதாகிலும் பிரச்சினை ஏற்பட்டால் குடும் பத்தவரை உஷார்ப்படுத்தும், ஆஸ்பத்திகளுக்கு அறிவிக்கும், பாதுகாப்பு நிறுவனங்களுக்குத் தகவல் கொடுக்கும். உதாரண மாக அதன் பராமரிப்பிலுள்ளவர் மயக்கமடைந்தால் அல்லது குளியலறையிலிருந்து வெளியில் வராவிட்டால் உடனடியாக உற வினர்களுக்கு அறிவிக்கும்.

வயதானவர்களும் அவர் களைப் பராமரிக்கும் பிரச்சினை களும் அதிகரித்துவருவதால் இந்த கணனிகளுக்கு ஜப்பானில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்து.

மிட்சுபிசி கரைக தொழில் நிறுவ னம் வடிவமைத்து உருவாக்கி யுள்ள 3அடி உயரமுள்ள கணனி மனிதன் சுமார் 5ஆயிரம் அல்லது 6ஆயிரம் பவுன் விலையில் எதிர் வரும்வருடம் ஏப்ரல் மாதமளவில் விற்பனைக்கு வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (பி)

# முன்னுக்குப் பின் முரணாகப் பேசி நாட்டு மக்களைக் குழப்புகிறார்

## நாட்டின் தலைவி மீது இப்படியும் ஒரு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சந்தர்ப்பம் அறியாது முரண்பாடான விளக்கங்ளையும், தகவல்களையும் ஜனாதிபதி வெளியிடுகிறார்.**

**நாட்டின் தலைவியான ஜனாதிபதி இவ்வாறு முன்னுக்குப் பின் முரண்பாடான கருத்துக்களை வெளியிடுவதனால் நாட்டு மக்கள் குழப்பமடைய நேரிடுகிறது.**



இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள எஸ்.பி,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானமுயற்சிகளை, சுதந்திர தின உரையில் ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

ஆனால், அதன்பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில், சமாதான முயற்சிகளை ஒரு சாகச விளையாட்டென எள்ளிநகையாடியுள்ளார்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்கிறார் என்பதனை இவை எடுத்துக்காட்டுகின்றன.

வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் அமைச்சர்கள் முன்னிலையில் ஒரு நிலைப்பாட்டையும், உள்ளூர் அரசியல்வாதிகள், மற்றும் மக்கள் மத்தியில் மற்றுமோர் நிலைப்பாட்டையும் ஜனாதிபதி கொண்டிருப்பது வருந்தத்தக்க விடயமாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வாறான இரட்டை வேடங்களை தவிர்த்து, நர்ட்டின் நலன்கருதி ஜனாதிபதியும், எதிர்கட்சியும்சமாதான நடவடிக்கை களுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் கேட்டுக் கொண் டார்.

தொடர்ந்தும் ஒரு விடயத்தில் மட்டும் ஜனாதிபதி மகிழ்ச்சியடைகிறார்.

சிறுவர்களை விடுதலைப்புலிகள் படைக்கு சேர்க்கும் விடயம் குறித்தும், சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தப்படுவதே அதுவாகும்.



ஜனாதிபதி நாட்டின் தலைவி என்ற ஸ்தானத்தை விட்டு.

இப்போது பிரதான எதிர்க்கட்சியாகவே செயற்படுகிறார்.

நாட்டுமக்களின் நலனில் அக்கறை கொள்ளவேண்டிய ஜனாதிபதி, எரிகிற விளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிவிடுவது போல செயற்படுகிறார் எனவும், அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார். (உ-8)

## நூல்வெளியீடு

(ஈச்சமோட்டை)

ஜோன்சன் ராஜ்குமார் எழுதிய கம்பர்மகன் நாடக நூல்வெளியீட்டு விழா எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது. (உ-59)

## யாழ்.குடாவில் 32 தொழு நோயாளர்கள் கடந்த வருடம் இனம்காணப்பட்டனர்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம்32 தொழுநோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்கள தொழுநோய் தடுப்பு இயக்கப்பிரிவு வெளியிட்டுள்ள புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 32 பேரில் 20 பேர் வரை சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இனம் காணப்பட்டுள்ளதாகவும் மேலும் கோப்பாய், சாவகச்சேரி, ஊர்காவற்துறை பிரிவுகளில் 12 பேர் வரையில் இனம் காணப்பட்டுளளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நோய் அனேகமாக பெண்களிலே இனம் காணப்பட்டுள்ளதாகவும்மேலும் பலர் யாழ். குடாநாட்டில் இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்நோய் காணப்பட்ட சிலர் பூரணமாக சிகிச்சை பெறுவதை இடையில் நிறுத்தி விடுவதால் மற்றவர்களிற்கும் தொற்றும் அபாயம் உள்ளதால் சரியான முறையில் சிகிச்சை பெறுமாறும் தவறின் அங்கவீனம் ஏற்படும் சாத்தியம் உள்ளதாகவும் சுகாதார சேவைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களின ஊடாக இவ்வருடம் செயற்படுத்தப்படவுள்ளது.

இலங்கையின் மற்றைய மாவட்டங்களுடன ஒப்பிடும்போது யாழ். மாவட்டத்தில் இந்நோயின் தாக்கம் கூடிய நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

## முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை நடுவு நிலையோடு அனுக வேண்டும்

### "ஹஜ்" வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

(கொழும்பு)

நீண்டகால யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்ச்சிகளில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களினது மனித உரிமைகளும், ஜனநாயக உரிமைகளும் வலியுறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க விடுத்துள்ள ஹஜ் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி விடுத்துள்ள ஹஜ் வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் சமாதானத்தையும், இனங்களுககிடையிலான ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கு உறுதி பூண்டுள்ள இவ்வேளையில் முஸ்லிம் மக்கள் மனநிறைவுடன் ஹஜ் பெருநாளை கொண்டாடுகின்றனர்.

சகல இனத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமா தானமே தற்போது நாட்டுக்கு அவசியம்.

முஸ்லிம் மக்களின் உரிமைகள் குறித்த விடயங்களில் நான் உன்னிப்பாக உள்ளேன்.

வடக்கு-கிழக்கு மக்களின் உரிமைகள எவ்வாறு பேணப்படுகிறதோ, அப்பிரதேசங்களின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகள் எவ்வாறு திட்டமிட்டு நடைபெறுகின்றதோ அதேபோல முஸ்லிம் மக்களின் உரிமைகள் பேணப்பட்டு அவர்கள் பிரதேசங்களும் புனரமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை நடுவு நிலையாக செயற்படும் நோர்வே அரசு தீர்த்து வைக்கவேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (உ-8)

## ஆசிய அபிவிருத்தி வங்கி அபிவிருத்திக்கு நிதி உதவி

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையின் அபிவிருத்தி திட்டங்களுக்கென்று 33 இலட்சத்து 35 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அத்துடன், போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு மாகாணங்களுக்கிடையிலான வீதிகளைபுனரமைப்பதற்கு 56.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனாக வழங்கியுள்ளது.

இவற்றுக்கான ஆறு ஒப்பந்தங்களை கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் நிதியமைச்சில் இடம்பெற்றது.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில், திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்தை, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் ஜோன்கூணி, இலங்கைக்கான யப்பானிய தூதுவர், அமைச்சுக் களின் செயலாளர்கள் சிலரும்கலந்து கொண்டனர். (உ-8)

## நிர்வாகிகள் தெரிவு

(காரைநகர்)

காரைநகர் மத்திய கிராம சேவையாளர் பிரிவின் மேசன், தச்சுத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் கடந்த 12 வருடங்களிற்குப் பின்னர் கடந்த வாரம் மீளமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி கிராம சேவையாளர் எஸ்.கே.சிவலிங்கம் தலைமையில நடைபெற்ற இவ்மீளமைப்புக் கூட்டத்தில் அங்கததவராக மா. கந்தசாமியும், செயலாளராக ஆ. விஜயராசாவும், பொருளாளராக வ. பன்னிருகையனும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-246)

## கந்தரோடையில் புத்தவிகாரை அமைப்பைக் கண்டித்து பேரணி

### விரைவில் நடத்தத் தீர்மானம்

(ஏழாலை)

கந்தரோடையில் புதிதாக புத்த விகாரை அமைக்கப்படுவதைக் கண்டித்து பொது மக்கள் வெகுஜனப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தயாராகி வருகின்றனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மண்டபத்தில் வலிகாமம வடக்கு, தெற்கு பொது அமைப்புகளின் ஒன்றியத் திற்குட்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளின் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அக்கலந்துரையாடலில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி கந்தரோடைப் புதைபொருள் ஆராய்ச்சி நிலையப் பகுதியில் புதிதாக புத்தவிகாரை ஒன்றை அமைத்து அதன் பாதுகாப்புக்காக இராணுவமுகாம ஒன்றையும் அமைத்துள்ள நடவடிக்கையினைக் கண்டித்து கண்டனப் பேரணி ஒன்றை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலில், பல அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள கலந்து கொண்டனர். (உ-12)

**வலம்புரி நடத்திய**
**தரம் ஆறு மாணவர்களுக்கான**
**கட்டுரைப் போட்டி பரிசளிப்பு**

காலம் : 15.02.-2003 சனி மு.ப, 10 மணிக்கு
இடம் : வலம்புரி கேட்போர் கூடம்

பரிசிற்குரியவர்கள் தவறாது வருகை தந்துபரிசினைப் பெற்றுக் கொள்ளவும்

வலம்புரிக் குடும்பம்.

# ஆசிரிய சமூகத்தால் மறக்க முடியாத ஆசிரியமணி அமரர் சி. சிவபாலசிங்கம்

ஆசிரியராக, அதிபராக அர்ப்பணிப்புள்ள ஆசிரிய தொழிற்சங்கவாதியாக விளங்கி தனது எழுபத்தாறாவது வயதில் அமரரானார் சிவகுரு சிவபாலசிங்கம். உடுவிலில் பிறந்து, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் படித்து அங்கேயே ஆசிரியராக விளங்கினார். அதன் பின்னர் பயிற்றப்பட்ட தமிழாசிரியராக வெளியேறி குருநாகல் இந்து மகாவித்தியாலயத்திலும், பின்னர் பெரியபுலம் மகாவித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர் பெரியபுலம் மகாவித்தியாலயத்திலேயே அதிபராக விளங்கினார்.

### கடன் வழங்கு சபையின் செயலாளர்

அமரர் ஆசிரியராகக் கடமையாற்றி வரும்போது, கல்வித்திணைகளை கடன் வழங்கும் சபை தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதி நிதியாக போட்டியிட்டு வெற்றி பெற்ற ஆசிரியப் பெருத்தகை பதினேழுபேர் கொண்ட கடன் வழங்கு சபையின் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இச் செயலாளர் பதவியை பத்தாண்டுகள் அலங்கரித்து ஆசிரிய சமூகத்திற்கும்,

## மறைந்தார் மாண்பு

கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கும் பாராட்டத்தக்க சேவை செய்ததை என்றும் ஆசிரிய சமூகம் மறக்க முடியாது.

### த.ஆ.சங்க யாழ்.மாவட்ட செயலாளர்.

இக்காலத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்மாவட்டச் செயலாளராகவும் ஆசிரியர்களால் தெரிவு செய்யப்பெற்ற அமரர் சிவபாலசிங்கம், தான் ஓய்வு பெறும் வரை செயலாளராகப் பணியாற்றியது ஒரு புதுமையாகும்.

ஆசிரிய சங்க தேர்தல்களில் ஒருவர் பல தடவைகள் ஓரே பதவிக்குத் தெரிவுசெய்யப்பெற்ற, அர்ப்பணிப்புச்சேவையாளர் சிவபாலசிங்கம்.

### நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்

தமிழ் மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் அவர் பேச்சில் நாம் கண்ட பண்புகளாகும். ஆசிரியர் பிரச்சினைகள், மேல் அதிகாரிகளுடன் நேரில பேசி தீர்ப்பதில் அவர் தீரர். பணியுமிடத்தில் பணிந்தும் துணிய வேண்டியதில் துணிந்தும் ஆசிரியர் உரிமைகள் காத்த, நிலைநாட்டிய ஆசிரிய மணிபோல் வேறொருவரை நாம் குறிப்பிட முடியாது.

நேர்மை, உண்மை, அர்ப்பணிப்புச் சேவை அவர் இரத்தத்தில் நிறைந்த பண்புகளாகும். அமரர் சிவபால சிங்கம் மறைவு ஆசிரிய உலகிற்கு நிறைதுப்பார்க்க முடியாத இழப்பாகும்.

புத்தொளி **ந. சிவபாதம்**

### அறநெறிப்பாடசாலை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கண்ணாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய அறநெறிப் பாடசாலை அண்மையில் இப்பகுதி கிராம சேவையாளர் செலவி தேவமனோகரியால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது. (உ-216)

### படிப்படியாகப் படையினர் வெளியேற்றம்

(சுதுமலை)

கற்கோவளம் கடற்கரையை அண்டிய பகுதிகளில் இராணுவத்தின் முகாம் அமைப்பதுடன், தொடர் காவலரண்களையும் அமைத்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இப்பகுதியில் பொது மக்களின் வீடுகளில் நிலை கொண்டிருநத படையினர் படிப்படியாக வெளியேறுவதும்குறிப்பிடத்தக்கது (உ-24)

### உதவி செய்ய ஆர்வம்

(காரைநகர்)

காரைநகர் மத்தியில் அமைந்துள்ள முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்திற்கு உதவி செய்ய பலரும் முன்வந்துஇருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இம் முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்தில் தற்போது 32 முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். (உ-246)

### பயிற்சிப் பட்டறை

(தனங்கிளப்பு)

டேவிற் பீரிஸ் கம்னியின் அனுசரணையுடன் பஜாஜ் முச்சக்கர வண்டி, மோட்டார் இரு சக்கர வண்டி ஆகியவற்றைப் பழுது பார்த்தலும் பேணுதலும் தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர் வரும் 15 ஆம் திகதிசனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00மணி முதல் பி.ப.4.00 மணிவரை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இபபயிற்சிப் பட்டறையில் பங்குகொளள விரும்புபவர்களை முன் கூட்டியே தொழில் நுட்பக் கலலூரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-37)

### பொதுக்கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்டதாச்சிச்சங்கத்தின் பொதுக கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்குகோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறவுள்ளது. (உ-75)

# அ.அட்டைஅற்றவர்கள் மீள் குடியமர்வு கொடுப்பனவு பெற ஆவன செய்ய வேண்டும்

## அரச அதிபரிடம் வலியுறுத்து

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற கொடுப்பனவு வழங்குவதில் வேளைக்கு வேளை நடைமுறைகள் மாற்றப்படுவதும் மக்களை அவசியமில்லாமல் அலையவைப்பதும் தவிர்க்கப் படவேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கம் தென்மராட்சி மக்களுக்கான மீள்குடியேற்ற கொடுப்பனவு தொடர்பாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இக் கொடுப்பனவு சம்பந்தமாக 2 ஆயிரம் ரூபாவுக்கான கொடுப்பனவுப் படிவத்தில் குடும்பத்தலைவரிடம் கையொப்பம் பெறப்பட்டு கொடுப்பனவின் போது வங்கியில் சமர்ப்பக்கவென ஒரு இலக்க சுட்டியும் வழங்கப்பட்டது.

ஆயிரம் ரூபாவுக்குஒரு கொடுப்பனவு படிவம் தயாரிக்கப்பட்டு அதிலும குடுமப தலைவரின் கையொப்பம் பெறப் பட்டது.

மீண்டும் மூன்றாவது தடவையாக ரூபா25 ஆயிரத் துக்கு கொடுப்பனவு படிவம் தயாரிக்கப்பட்டு அதிலும் குடும்பத்தலைவரின் கையொப்பம் பெறப்பட்டது.

தற்போது இவை எல்லாவற்றிற்கும் மேலதிகமாக யாழ்.அரச செயல கத்தில் இருந்து வரும் அதிகாரிகள் குழுவொன்று மக்களிடம் நேரடி யாகச்சென்று கையொப்பங்களைப் பெறுகின்றது. இந்த நடை முறையின் போது, தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கும் குடும்பத் தலைவியால் விண்ணப்பங்கள் செய்யப்பட்டோருக்கும் கொடுப் பனவு வழங்கப படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகளின் இந்த நட வடிக்கையால் யுத்தத்தால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் குழம்பிய நிலையில் இருப்பதை நாம் இங்கு தங்களுக்கு சுட்டிக் காட்டவிரும்புகின்றோம்.

இந்த வகையில் ஒரு குடும்பத் தலைவர் 42 ஆயிரம் ரூபாவுக்கான கொடுபபனவு படிவங்களில் கையொப்பமிட்டபின், இப்படிப்பட்ட நிபந்தனைகளை விதிப்பதை எம்மால் விளக்கிக கொள்ள முடியாதுள்ளது.

எனவே, தென்மராட்சியில் தேசிய அடையாள அட்டை இல்லாத மக்களுக்கு, பகுதி கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோர் ஆள் அடையாளத்தை உறுதி செய்யுமிடத்து கொடுப்பனவை வழங்க வேண்டும்.

அத்தோடு, குடும்பத்தின் தலைவி கொடுப்பனவு படிவத்தில் கையொப்பமிட்டிருப்பின், குடும்பத் தலைவரின் ஒப்புதல் கடிதத்தைப் பெற்று இக் கொடுப்பனவை வழங்க நட வடிக்கை எடுக்க வேண்டும் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மகஜரின் பிரதிகள் பிரதேச செயலர், அமைச்சர் தி.மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ், எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுளளன. (உ-77)

# தொண்டர் ஆசிரியர் உண்ணாவிரத போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

வடமத்திய, வடமேல் மாகாண தொண்டர் ஆசிரியர்கள் பத்திர முல்ல கல்வி அமைச்சு அலுவலகத்துக்கு முன்னால நடத்தி வந்த சாகும்வரையிலான உண்ணா விரதப்போராட்டத்தை நேற்றுமுன் தினம் முதல் கைவிட்டுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய அங்கு சென்ற பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தனா உண்ணாவிரதமிருந்த தொண்டர் ஆசிரியர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, வழங்கிய உறுதி மொழியை அடுதத்தே உண்ணா விரதம் கைவிடப்பட்டது.

மேற்படி தொண்டர் ஆசிரியர் களால மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அடுத்தமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரச்சினைக்கான தீர்வு காணப் பட வேண்டும்,

இது தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்கு தனியான குழு நியமிக்கபபடவேண்டும்.

வடமத்திய மாகாண புத்தள மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு முடிவு காணவேண்டும். ஆகிய கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்துள்ள னர்.

கடந்த 140 நாட்களாக சுழற்சி முறையிலான உண்ணாவிரத்தை மேற்கொண்டு வந்த மேற்படி தொண்டர் ஆசிரியர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் சாகும் வரையிலான உண்ணா விரதத்தை மேற்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## லஞ்ச ஊழல் ஆணையாளருக்கு எதிராக ஒழுக்க வழுவுரை மனு

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணையாளருக்கு எதிரான ஒழுக்க வழுவுரை குற்றச்சாட்டுத்தொடர்பான மனு வொன்று நேற்று முன்தினம் எஸ்.பி. திஸநாயக்க தலைமையிலான அமைச்சர்களால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இரகசியம் காக்கப்படுவது தொடர்பான லஞ்ச ஊழல் சட்டவிதிகளை மீறி, லஞ்ச ஆணையாளர் கிங்ஸ்லி விக்கிரமசூரிய வெளியார் ஒருவருக்கு இரகசியங்களை வெளியிட்டாரா என்பது பற்றி ஆராய்வதற்கு ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமிக்க வேண்டும் என்று மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுளளது.

இது ஒழுக்க வழுவுரைக் குற்றச்சாட்டை முறைப்படி சமர்ப்பிபதற்கு முன்னோடியானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் எஸ் பி.திஸநாயக்கவுக்கு எதிராக நடைபெற்றுவரும புலனவிசாரணைபற்றிய விபரங்களை விக்கிரமசூரிய ஜனாதிபதிக்கு தெரிவித்தார் என்ற குறறச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் சட்டமூலத்தின் 19வது பிரிவின் படி ஆணையாளருக்கு தண்டனை வழங்கபபடல் வேண்டும், அவர் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்றும மனுவில்கோரப்பட்டுள்ளது. (உ)

### கிணற்றில் விழுந்து இளைஞன் மரணம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியில் இளைஞர் ஒருவர் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அண்மையில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மயில்வாகனம் மகேஸ்வரன் (வயது - 21) என்பவரே உயிரிழந்தவராவார். பிரஸ்தாபநபருக்கு வலி நோய்உள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. (த-51)

# வரலாற்றுத் துயரை மூடி மறைக்கும் செயல்

## நூல் நிலையத் திறப்புக்கு பல்கலை .மாணவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

எமது வேண்டுகோள்களை மீறி நூலகம் முழுமையாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் எதிர் வரும் 14ஆம் திகதிதிறக்கப்படும் பட்சத்தில், ஒட்டுமொத்த குடாநாட்டு மக்களின் வெகுஜனப் போராட்டத்தை தமிழ் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்நோக்க வேண்டி வரும் என்பதை மிகவும் மனவருத்தத்தடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

இது தொடர்பாக தமிழீழ மக்கள் யாவரும் விழிப்படன் இருந்து சம்பந்தப்படடவர்களின் குறுகிய அரசியல் நோக்கத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க அணிதிரளுமாறு வேண்டுகின்றோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அச் செய்திக்குறிப்பில் மேலும்,

தமிழீழ மக்களின் பாரிய சொத்தாகிய கல்விச் செல்வத்தினை முற்ற முழுதாக சிதைத்தொழிக்கும் சிங்களப் பேரினவாதிகளின் திட்டங்களில் ஒன்றாக தெற்காசியாவிலேயே மிகப் பொிய கல்வி கலைப் பொக்கிசமாக விளங்கிய யாழ். நூலகம் சிங்களக் காடையர்களினால் முற்ற முழுதாக திட்டமிட்ட வகையில் தீக்கிரையாக்கப் பட்டு, நாசமாக்கப்பட்டமை தமிழீழ மக்களால் மட்டுமல்ல உலகத்தில் வாழும்தமிழ் பேசும் மக்களாலும் என்றென்றும் மறக்கமுடியாத துயர வரலாறறு நிகழவு என்பது யாவரும் அறிந்ததே.

இநத துயர வரலாற்று நிகழ்வினை முடி மறைக்கும் நேக்குடன் புனர்வாழவு, புனரமைப்பு என்ற பெயரின் கீழ்இன்று இந் நூலகம் புனரமைக்கப்பட்டு வருகின்றமை தமிழீழ மக்களை பெறுத்த மட்டில் ஓர் அளவற்கு மகிழ்ச்சியை எற்படுத்துகின்ற விடயமாகும்.

இருந்த போதிலும், தமிழ் மக்களினால் பாராளுமன்றம் அனுப்பட்ட அரசியற் கட்சி உறுப்பினர்கள் இந் நூலக புனரமைப்பக்கென பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட நிதிகள் யாவும் முழுமையாக வந்து சேராத நிலையிலும் மேலும், இக்கலைச்சொத்து முழுமையாக புனரமைத்து ஒப்படைக்கப்படாதநிலையிலும் சிங்களப் பேரி னவாத அரசுடன் இணைந்து குறுகிய அரசியல் நேககம் கருதி குறிப்பாக தங்கள் பெயர்களை திறந்துவைத்தவர்என்றபேர்வையில கற்கலில் பொறித்து தமிழீழ மக்களுக்கு மீண்டும் பேரினவாத அரசுடன் இணைந்து துரோகம் இழைக்க கங்கணம் கட்டி நிற்பது பெரும் துயரத்தினை ஏற்படுத்து கின்றது.

இந் நிலையில் குடாநாட்டில் உள்ள மக்கள், பொது அமைப்புகள், மாணவர் சமூகங்கள் மற்றும் பல கல்விச்சமூகங்கள் நூலகத்தை முழுமையாக புனரமைப்பு செய்த பின்னரே திறக்க வேண்டும்என நேரிலும் அறிக்கைகள் மூலமும் விடுத்த வேண்டுகோளை முழுமையாக தம்மை தாமே தமிழ்த் தலைவர்கள்என கூறிக்கொள்பவர்கள் புறக்கணித்து வ்ட்டு, இந நூலகத் திறப்பு விழாஊடாக தமது கௌரவத்தை நிலை நிறுத்த முயல்வது ஜரணிக்க முடியாத ஒன்றாகும்.

இந் நிலையில் தம்மைத்தாமே தமிழ்த்தலைவர்கள், என கூறிக் கொள்பவர்கள் மக்களின் கருத்துக்கு கூடிய கவனம்செலுத்தி, நூலகம் முழுமையாக புனரமைப்பு செய்த பின்னரே திறக்கவேண்டும் என கோருகின்றோம் என்றுள்ளது. (உ)

# அணையாவிளக்கு அன்னை பராசக்தி
# 31ம் நாள் நினைவு

உறவில் கலந்தது

13 * 05 * 1928



உணர்வில் நிறைந்தது

14 * 01 * 2003

## அமரர் V.M. கணபதிப்பிள்ளை - பராசக்தி

### திதி - வைகுந்த ஏகாதசி

### "அம்மா"

கம்ப நாடன் காவியத்தின் கவிதையல்லவா - நீ
கவியரசு இளங்கோவின் கனவு அல்லவா?
இம்பர்நாடு இனிது பெற்ற இனியளல்லவா - அம்மா
இதயவானில் சிறகடிக்கும் ஈகமல்லவா?
உம்பர் நாடு உவகை கொண்ட உதயமல்லவா - இந்த
உலகினுக்கு ஒளி கொடுத்த 'சக்தி'யல்லவா?
நம்பு வாய்மை கொண்டு நின்ற நறவமல்லவா - இன்று
நடந்ததென்ன மாநிலத்தில் மாயமல்லவா?

அந்தியேட்டி நிகழ்வுகள் 13-02-2003 நடைபெறும்

அன்னையின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்

டச்சு வீதி,
சாவகச்சேரி.

V.M.K. குடும்பம்.

## இன்று ஒரு தகவல்

# மனம் ஒரு நிலைப்பட்டால் வெற்றி நிச்சயம்

மனது இருக்கிறதே அதற்கு உதாரணமாக எதைச் சொல்லுவார்கள் தெரியுமா? குரங்கைத்தான் சொல்லுவார்கள்! குரங்கு மரத்தில் ஒரு இடத்திலேயா உட்கார்ந்திருக்கிறது? ஒவ்வொரு கிளையாகத் தாவித்தாவிப்போய்க் கொண்டேயிருக்கிறது! ஏதாவது சேஷ்டை பண்ணிக்கொண்டே இருக்கிறது. அதனாலே தான் மனம் ஒரு குரங்கு என்று சொல்கிறார்கள். ''இந்த மனதைக் கன்னா, பின்னா என்று அலையவிடாமல் அதை ஒரு நிலைப்படுத்து'' என்று பெரியவர்கள் சொல்கிறார்கள் அவர்களுக்கென்ன, சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள்! படுகிற அவஸ்தை நமக்கல்லவா புரிகிறது.

நமது மனது வெறுமனே அலைவதோடு இருந்தால், அது எங்கே அலைந்து கொண்டிருக்கிறது என்று தேடிக்கண்டுபிடித்து அதைக் கட்டுப்படுத்தலாம். சில சமயம் அது அலையப்போகிற பொழுது அப்படியே காணாமல் போய்விடுகிறதே! எங்கேயிருந்கிறது என்று கண்டு பிடிப்பதே பெரும்பாடாக இருக்கிறது. பின் எப்படி அதைக் கட்டுப்படுத்துவது? அதுவாக மனம் வைத்துத்திரும்பி வந்தால் தான் உண்டு! மனதை ஒரு நிலைப்படுத்துவது மிகவும் கஷ்டம் என்று பலர் நினைக்கிறோம். அது எல்லோராலும் முடியக்கூடிய காரியம் தானாம்.

''வேண்டுமென்றால் ஒரு பரிசோதனை பண்ணிப்பாருங்கள். என்கிறார் ஒரு பெரியவர். (சமீபத்தில் சித்தியடைந்த ஸ்ரீ அபிரவ வீத்தியா தீர்த்த மகா சுவாமிகள்) வேறு ஒன்றுமில்லை, ஒரு சாதாரண ஆளிடம் நிறைய சில்லறைக் காசுகளைக்கொடுத்து ''எவ்வளவு இருக்கிறது'' என்று எண்ணச் சொல்லுங்கள்! பத்துக் காசு - ஐந்து காசு இப்படி இருக்கட்டுமே. அவன் எவ்வளவு தான் எண்ணினாலும் நடுவில் எண்ணிக்கையைத் தவறவிட்டுவிட்டு விழிப்பான். மறுபடியும் முதலிலிருந்து ஆரம்பிப்பான்.

அதே ஆளிடம் நூறு ரூபாத் தாள்களாக கொஞ்சம் கொடுத்து எண்ணச் சொல்லுங்கள். இப்போது அந்த ஆள் கொஞ்சம் நிதானமாகக் கவனமாக எண்ண ஆரம்பிப்பான். இது ஏன்? ஒரு நோட்டை விட்டுவிட்டாலும் நூறு ரூபா போய்விடும்! முதலில் அப்படி இல்லை. ஐந்து காசு போனாலும், பத்துக்காசு போனாலும் அது பெரிதாக மனதுக்குத் தோன்றவில்லை. இந்த உலகத்தில் எதுவும் பெரியது இல்லை இதைவிடப் பெரிதாக உள்ளது ஒன்று இருக்கிறது அதற்கு விலை மதிப்பில்லை என்கிற எண்ணம் வந்துவிட்டதென்றால் மனதை ஒரு நிலைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது என்கிறார் அந்தப் பெரியவர்.

மனதை ஒரு நிலைப்படுத்தியாய் விட்டதென்றால் வெற்றி கிட்ட நெருங்கிவிட்டதென்று அர்த்தம், துரியோதனன், அர்ஜுனன் இருவருக்குமே குரு துரோணர்தான். இவர்களிருவருக்கும் அவர்தான் வில்வித்தை கற்றுக் கொடுத்தார். கற்றுக் கொடுத்ததைப் பொறுத்தவரையும் எந்த வித்தியாசமுமில்லை. இருவருக்கும் ஒரே மாதிரித்தான் சொல்லிக் கொடுத்தார். ஆனால் அர்ஜுனன் தான் கெட்டிக்காரனாக வந்தான். ஏன்? அங்கே தான் விஷயம் இருக்கிறது.

ஒரு நாள் துரியோதனன் - அர்ஜுனன் இருவருக்கும் அவர்கள் எந்த அளவுக்குக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்ப்பதற்காகத் துரோணர் பரீட்சை வைத்தார். இருவரையும் காட்டில் அழைத்துக்கொண்டு போய் ஓரிடத்திலே நிறுத்தினார். முதலில் துரியோதனனைக் கூப்பிட்டு ''அதோ தெரிகிறது பார் ஒரு மரம். அந்த மரத்தில் வலது பக்கத்தில் நீளமாக இருக்கிற ஒரு கிளையின் மேல் ஒரு புறா உட்கார்ந்திருக்கிறது. அந்தப் புறாவின் வலது கண்ணுககுச் சரியாக நீ குறி வைக்கவேண்டும். எங்கே செய்பார்க்கலாம்'' என்றார். துரியோதனன் அப்படியே செய்தான்.

''இப்போது உனக்கு என்ன தெரிகிறது?'' என்று கேட்டார் துரோணர். அதற்கு அவன் ''மரம், தெரிகிறது! அந்தமரத்தின் கிளை தெரிகிறது! அதன்மேல் உட்கார்ந்திருக்கிற புறா தெரிகிறது! அந்தப் புறாவினுடைய தலை தெரிகிறது! கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் நீங்கள் குறிவைக்கச் சொன்ன அந்த வலது கண்ணும் தெரிகிறது'' என்றான். சரி! நீ போகலாம். என்றார்.

அடுத்ததாக அர்ஜுனனைக் கூப்பிட்டார். அதேமாதிரிக் குறி வைக்கச் சொன்னார். அவனும் அப்படியே செய்தான் இப்பொழுது உனக்கு என்ன தெரிகிறது என்று கேட்டார் துரோணர். !புறாவினுடைய வலது கண்ணைத் தவிர வேறு எதுவுமே எனக்குத் தெரியவில்லையே! என்றான் அர்ஜுனன். அர்ஜுனனுக்கு நிகராகத் துரியோதனன் வரவே முடியாது என்பதை அப்பொழுதே முடிவு பண்ணிவிட்டாராம் துரோணர். ஆதலால் மனம் எந்த அளவுக்கு ஒரு நிலைப்படுகிறதோ அதுதான் வெற்றிக்கு ரகசியம்.

இந்தக் காலத்து இளைஞன் ஒருவன் ஒரு துப்பாக்கியோடு ஓர் ஆசிரியரைத் தேடிவந்தான். ''சார்! எனக்குத் துப்பாக்கி சுடக் கற்றுக் கொடுங்கள்'' என்றான். ''ஏதடா இந்தந் துப்பாக்கி உனக்கு?'' என்று பயந்து போய்க் கேட்டார் ஆசிரியர். ''எங்கள் அப்பா வைத்திருந்தார். அவருக்குத்தெரியாமல் இங்கு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். எங்கள் அப்பா திரும்பி வீட்டுக்கு வருவதற்குள் திருப்பிக்கொண்டு போய் இது இருந்த இடத்திலேயே வைத்து விடுவேன்'' என்று மிகவும் நம்பிக்கையோடு சொன்னான்.

''சரி'' என்று சொல்லிவிட்டு இந்த ஆசிரியரும் துரோணர் மாதிரியே ஒரு மரத்தைக் காட்டி, அதில் உட்கார்ந்திருக்கிற ஒருகாக்கையினுடைய கண்ணுக்குக் குறி வைக்கச் சொன்னார். இவனும் குறி வைத்தான். ''இப்பொழுது உனக்கு என்னடா தெரிகிறது?'' என்று கேட்டார். இவனுக்கு கைகள் கால்கள் எல்லாம் மெதுவாக உதறத்தொடங்கியது ''சார் எங்கள் அப்பாவின் முகந்தான் அங்கே தெரிகிறது'' என்றான். ''அங்கே மட்டுமில்லையப்பா.. உனக்குப் பின்னால் கூட உங்கள் அப்பாவினுடைய முகம்தான் இப்பொழுது தெரிகிறது! திரும்பிப்பார்! அவரே உன்னைத் தேடிக்கொண்டு இங்கே வந்துவிட்டார்.'' என்றார் ஆசிரியர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அரும்பொருட் கடத்தலில் ஈடுபடுவது தேசத்துரோக குற்றம்

## கண்டிக்கிறது வரலாற்றுக் கழகம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அரும்பொருட்களின் களவு எல்லை மீறும் அபாயம் - துணைபோவது தவிர்க்கப்பட வேண்டும்'' என்னும் தலைப்பில் யாழ். கல்கலைக்கழக வரலாற்றுக் கழகம் செய்திக் குறிப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு,

அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் புராதன விக்கிரகங்கள் களவாடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இச் சம்பவங்கள் எமது தொன்மையையும், பண்பாட்டையும் பாதிக்கும் ஓர் செயலாகும்.

சில சுயநலமிகள் சுயலாபத்திற்காக மேற்கொள்ளும் களவு எமது பாரம்பரியத்தினை அழிப்பதாக அமைகிறது. தொல்பொருட் சின்னங்களாக விளங்கும் ஆலய விக்கிரகங்கள் ஏ-9 பாதை திறப்பதற்கு முன்னர் வேறு மார்க்கமாகக் கடத்தப்பட்டிருக்க வாய்ப்புண்டு.

தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின் ஆலயங்களின் புராதன வழிபாட்டுச் சின்னங்கள் களவாடப்படும் சம்பவங்கள் சாதாரண விடயமாகி விட்டன.

இது ஒரு தேசத்துரோகக் குற்றமாகும். இதில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து தண்டிக்க வேண்டியது தமிழ் மீதும், தமிழ்ப்பண்பாட்டின் மீதும் அக்கறைகொண்ட அனைவரினதும் பாரிய கடமையாகும்.

இத்தகைய சமுதாயப் பொறுப்பற்ற சுயலாபம்கருதியோரின் செயற்பாட்டை உடனடியாகத் தடுக்க அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

அதிகாரமுடைய தரப்பினர் இவ்விடயத்தில் உடனடியாகக் கவனம் செலுத்தி அக்கறையுடன் செயற்படுமாறு வேண்டிக் கொள்கிறோம் என்றுள்ளது. (உ)

# கட்டாக்காலி நாய் ஒழிப்பு மருந்து மூன்று மாதமாக வரவில்லை

## நாய்க்கடிக்கு இலக்காவோர் அதிகரிப்பு

(சுதுமலை)

யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குக் கடந்த 3மாதங்களிற்கும் மேலாக கட்டாக்காலி நாய்களை அழிக்கும் ஸ்ரெச்சினின் எனும் மருந்து வரவில்லை என சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வலிதென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைப் பிரிவில் உள்ள ஆனைக்கோட்டை, மானிப்பாய் நகர்ப்பகுதி, சண்டிலிப்பாய், நவாலி, பண்டத்தரிப்புப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் பெருகியிருப்பதாகவும், நாய்க்கடிக்கு இலக்காவோர் தொகை இப்பகுதிகளில் நாளுககு நாள் பெருகி வருவதாகவும் இப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால், பொதுமக்களால் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் பணியை உடனடியாக ஆரம்பிக்குமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, வலி தென்மேற்கு பிரதேச சபையின் தலைவருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (உ-252)

# அரச பணிபுரியும் பட்டதாரிகளின் விபரங்கள் மீளாய்வுக்குட் படுத்தப்படும்

(கொழும்பு)

அரச சேவைகளில் பட்டத்தினை அடிப்படைத் தகைமையாகக் கொள்ளப்படாத பதவிகளில் பணிபுரியும் பட்டதாரிகளைப் பற்றிய மீளாய்வொன்றினை மேற்கொள்வதற்கு நிருவாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி அரசசேவை, மாகாண அரசசேவையைச் சார்ந்த பட்டம் அடிப்படைத் தகைமையாகக் கொள்ளப்படாத பதவிகளில் பணிபுரிபவர்கள் தமது தகவல்களை மேற்படி அமைச்சுக்கு வழங்குமாறு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கும் இது குறித்த சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அவ்வப்போது, பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கும் அரசின்வேலைத திட்டங்களின் கீழ் சேர்க்கப்படுகின்ற அலுவலர்களின் தகவல்கள் இதில் உள்ளடங்காது.

தற்காலிக அல்லது அமைய அடிப்படையில் சேவையாற்றுகின்ற அலுவலர்களின் தகவல்கள் உரியவாறு உள்ளடக்கப்படல் வேண்டும் எனவும அச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3)

## இராசி பலன்

**13.02.2003**

**(மாசி 01, வியாழன்)**

| | |
|---|---|
| ஏகாதசி | மு.ப 8.17வரை |
| திருவாதிரை | மு.இ11.04வைர |
| இராகுகாலம் | 2.04 - 3.34 |
| சுபநேரம் | 8.04 - 9.34 |

பீம ஏகதசி விரதம்

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப நலம், முயற்சி கைகூடும், தனவரவு.

**இடபம்**
பிரியம்,எடுத்தகருமங்கள் தாமதமாகும்,தனவிரயம்,புதிய திருப்பம்.

**மிதுனம்**
தேகநலன்,ஜனவசியம், விருந்து பசாரம்,காரிய அனுகூலம்.

**கடகம்**
மனக்கிலேசம்,திடீர் நன்மை, காரிய அலைச்சல்,நண்பர்கள் மனஸ்தாபம்.

**சிங்கம்**
தனலாபம்,தெய்வசிந்தை,குடும்பத்தில் மகிழ்ச்சி,காரியநன்மை.

**கன்னி**
பெரியோர் உதவி, நினைத்த காரியம் கைகூடும்,தொழில் முன்னேற்றம், நல்ல செய்தி

**துலாம்**
கட்டுப்பாடு பிரயாணம், அதிகாரம், ரோகம்.

**விருச்சிகம்**
காரிய தடங்கல் வாகன பயம், உடல் நலக்குறைவு, நிலைக்கேடு.

**தனுசு**
போசன சுகம்,சகோதரக் உதவி பொருள் சேர்க்கை, கௌரவம்.

**மகரம்**
செய்தொழில் விருத்தி,காரிய நன்மை,பிறர் உதவி,தேகநலன்.

**கும்பம்**
ஆரோக்கியக் குறைவு,வியாபார நன்மை, முயற்சி தாமதம், குடும்பக்கவலை.

**மீனம்**
மனக்சஞ்சலம்,முயற்சி தாமதம், மாதாவழி உறவு,ரோக நிலை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# திருட்டு சந்தேக நபர்களுக்கு 21ஆம் திகதிவரை விளக்கமறியல்

(ஏழாலை)

அரும்பொருட்களைத் திருடி விற்பனை செய்து வந்த ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் அரும்பொருட்கள், ஆலயவிக்கிரகங்கள் என்பவற்றைத் திருடி விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுன்னாகம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டிருந்த ஹட்டன் என்.எல்.ரிறொசிற்றபாம் கொட்டகல என்ற இடத்தைச் சேர்ந்த பு.புஸ்பலிங்கம், கோண்டாவில் மேற்கைச்சேர்ந்த க.முத்துலிங்கம், உடுவில் ஆலடி நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த செ.அருச்சுனா, மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த க.ஸ்ரீகுமார், வ.சூரியகுமார், மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தைச் சேர்ந்த தே.ஜேசுதாசன் ஆகிய சந்தேக நபர்களும் மல்லாகம் நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டபோதே எதிர்வரும் 21ஆம்திகதிவரை அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (உ-12)

# எயிட்ஸ் விழிப்புணர்வுத் திட்ட பயன்பாடு குறித்துக் கருத்துக் கணிப்பு

(ஈச்சமோட்டை)

ரி.ஆர்.ஆர்.ஓ மற்றும் யுனிசெவ் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பயன்பாடு பற்றிய கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில், சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நடைபெற்று வரும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளில் பங்கு பற்றியவர்களிடையே இவ் ஆய்வு எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்படி விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பற்றிய மக்களில் 81வீதமானவர்கள் எயிட்ஸ் தொடர்பில் பூரண விளக்கங்களை தெளிவாக பெற்றுள்ளமை முதற்கட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. (உ-59)

## கல்வி வளர்ச்சிக் கழகம்

(ஊர்காவற்றுறை)

வேலணைத்துறையூரில் உள்ள பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் அப்பகுதியில் கல்வி வளர்ச்சிக்கழகம அண்மையில் அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

வேலணைத்துறையூரில் உள்ள மாணவர்களின் நன்மை கருதி மேற்படி வேலணை கல்வி வளர்ச்சிக்கழகம் மாலைநேர வகுப்புக்களை நடத்தி வருகின்றது. (உ-75)

# இந்திய நாட்டின் 10 கோடி உதவியுடன் பனைவள தொழில் மேம்பாட்டு மையம்

## காரைநகரில் விரைவில் அமையும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

(காரைநகர்)

யாழ். மாவட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையினால் நவீன முறையிலான பனைவள தொழில் மேம்பாட்டு மையம் காரைநகரில் அமைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

பனை வள தொழில் மேம்பாட்டு மையம் அமைப்பது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

இந்திய நாட்டின் உதவியுடன் 10 கோடி ரூபா செலவில் முற்றிலும் நவீன முறையில் இது அமைக்கப்படவுள்ளது.

பாரிய வடிசாலை ஒன்றும் இதற்குள் அடங்கும். இவ்வடிசாலையில் போத்தல் கழுவும் செயற்பாட்டில் இருந்து சாராயம் அடைத்து முத்திரை ஒட்டுதல் வரையிலான சகல வேலைகளும் இயந்திர மயமாக்கப்படும்.

அத்துடன் பனை அபிவிருத்திச் சபையின் பனம் சாராயத்திற்கு இலங்கையின் பல பாகங்களிலும் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கூறுகையில், இத்தொழில் மேம்பாட்டு மையத்தில் வடிசாலை உற்பத்தியுடன் பனை வள கைவினைப் பொருட்கள் உற்பத்தியும் அதற்கான விசேட பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

பனை வள தொழில் மேம்பாட்டு உற்பத்திக்கான தும்புத்தொழில் மற்றும் பனங்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு வெளி மாவட்டங்களிற்கு மட்டுமல்லாது வெளி நாடுகளிற்கும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பருவ காலங்களில் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படும் பனங்கள்ளைச் சேகரித்து போத்தலில் கள் அடைக்கும் தொழிற்பாடும் இங்கு மேற்கொள்ளப்படும்.

நவீன முறையில் அமைப்பதனால் ஒரு வருடத்திற்கு மேல் பாதுகாத்து வைக்கக் கூடியதாக இது இருக்கும்.

பனையிலிருந்து பயன்கள் பெறக்கூடிய நிலையில் உள்ள போதும் தேவையான அளவிற்கு தொழிலாளர்கள் இல்லாது இருப்பது கவலையளிக்கின்றது.

சீவல் தொழிலாளர்களின் பாதுகாப்புக் கருதியும் தொழிலை இலகுவாக்கும் நோக்குடனும் பனை மரத்தில் ஏறாது இயந்திரத்தின் உதவியுடன் ஏறி கள் இறக்கக் கூடியதான இயந்திரமொன்று விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன் மாதிரிவடிவம் அடுத்த வாரமளவில் இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்படவுள்ளது. இதன் மூலம் தொழில் செய்பவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்படும்.

இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் மேற்கொள்ளப் படும்இத்திட்டத்தின் கீழ் 600 பயிற்சியாளர்கள் ஒரே முறையில் பயிற்சி பெறவுள்ளனர். பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவும் வழங்கப்படும். இதன் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (உ-246)

---

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்டபின் அல்லது —குறள்—

வலம்புரி.

## இடுப்புப்பட்டி பிரச்சினை

அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையே செய்து கொளளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பநதத்தின் பிரகாரம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்கள் இன்றி விடுதலைப் புலிப் போராளிகள் நடமாட முடியும்.ஆனால் இப போது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மேலாக யாழ்.குடா நாட்டு இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் இடுப்புப்பட்டி அணியக் கூடாதென நிபந்தனை விதித்துள்ளனர்.இராணுவத்தின் இந் நிபந்தனை விசித்திரமாகவுள்ளது.விடுதலைப்புலிகளை ஏதோவொரு வகையில் சீண்ட வேண்டும் என்பதற்காக இடுப்புப்பட்டி விவகாரத்தைப் படையினர் எடுத்துக் கொண்டுள்ளனர் என்பதை விட அதற்குக் கூறக் கூடிய நியாயம் வேறெதுவும் இல்லை.

விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் அணியும இடுப்புப்பட்டியை,மையமாக வைத்து புலிகளுடன் சீணடும் இராணுவத்தின் திட்டம் நேற்றைய தினம் மானிப்பாய் பகுதியில் அரங்கேறியுள்ளது.

இதன் காரணமாக பெண் போராளிகள், பொது மக்கள, பத்திரிகையாளர்கள் எனப் பலரும் காயமடைந்துள்ளனர்.சாதாரண இடுப்புப்பட்டி விவகாரத்தில் இராணுவத்தினர் மிகக் கடும் போக்கை கடைப்பிடித்தமையும்,புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும வகையில் படையினர் நடந்து கொண்டதும்,மீண்டுமோர் யுத்தத்தை ஏற்படுத்தும் முயற்சியென்றே கருத வேண்டும்

விடுதலைப் புலிகளின் பெண் போராளிக்ள் அணிகின்ற இடுப்புப்பட்டிதான்; இராணுவத்தினருக்கு இருக்கக் கூடிய பெரிய பிரச்சினை எனறால்,அதன் மூலம் சமாதான முயற்சிகள் தோல்வி அடையலாம் எனப் படையினர் கருதினால்,அது குறித்து கண்காணிப்புக்குழுவிற்குத் தெரியப்படுத்தி அது விடயத்தில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருக்கலாம்.அல்லது அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தையில் அது பற்றி ஆராய்ந்திருக்கலாம்,அதை விடுத்து புலிப் பெண் போராளிகளின் இடுப்புப்பட்டியை, இராணுவத்தினர் அகற்றமுற்படுவதென்பது பாரதூரமான குற்றமாகும்.அது மட்டுமன்றி அப் பகுதியில் கூடிய பொது மக்களையும், பத்திரிகையாளர்களையும் தாக்கியுள்ளனர்.

நெல்லியடியில் இடம் பெற்ற அதே பாணியில் இராணுவத்தின் தாக்குதல் சம்பவம அமைந்துள்ளது.நெல்லியடியில் வலம்புரிச் செய்தியாளர் வே.தவச்செல்வம் தாக்கப்பட்டமையும்,அது தொடர்பாக அவர் உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் செய்தமையும் நினைவுறுத்த வேண்டிய நேரத்தில் மீண்டும் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டுளனரெனில்,அது சகல தரப்பாலும் கண்டிக்கப் படவேண்டியது

---

# யாழின் அருமை பெருமைகளை காப்பாற்றி வாழ வேண்டும்

## ஹெறிற்றேஜ் பவுண்டேசன் நிறுவன தலைவர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 20 வருட காலம் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக எமது கலாசாரம் பாதுகாக்கப்பட்டுள்ளது. நாம் சிங்கப்பூர் போலவோ பாங்கொக் போலவோ வாழ விரும்பக்கூடாது. மேற்குலகம் இன்று பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளது. எமது யாழ்ப்பாணத்தின் அருமை பெருமைகளை நாம் காப்பாற்றி வாழவேண்டும். அது தான் இன்றைய அவசிய தேவையாகும்.

தென்பகுதியில் விவசாய அபிவிருத்திப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வரும் சுயசார்பு நிறுவனமான ஹெறிற்றேஜ் பவுண்டேசன் நிறுவனத்தின் தலை வரான மனிக்சுங்கராசாகர அண்மையில் யாழ் வந்தபோது செய்தியாளர்களுடன் கலந்துரையாடுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில்,

நாம் இதுவரை காலமும் அதிகமாகப் பேசிவிட்டோம். பேச்சினால் பயனில்லை. நாம் எதையும் செயலில் காட்டவேண்டும். எம் மண்ணில் நீண்ட காலமாக நாம் நீரையும், மண்ணையும், காற்றையும் மதித்து வாழ்ந்து வருகின்றோம்.

யாழ்ப்பாணக் காற்றின் அருமையை நாம் உணர்வோம். எமது கலாசாரம் புகழ்பூத்தது. பனைமரம் எமது கலாசாரத்தின் சின்னம். இன்று உலக மயமாக்கல் கொள்கை எமது வாசல் படியை அண்மித்துள்ளது. நாம் எமது உணர்வுக்கு கூடுதல் விலையைக் கொடுக்கின்றோம்.

தென்மராட்சியில் இருந்து லொறிகளில் பசளை, பூச்சி மருந்து மற்றும் பிளாஸ்ரிக் பொருட்கள் தாராளமாக யாழ். வந்து கொண்டிருக்கின்றன. எமது விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் நெல் அரிசியில் புரோட்டீன் சத்து இல்லாமல் போய்விட்டது. நாம் உண்கின்ற உணவைப் பொறுத்துத் தான் எமது வாழ்க்கையும் அமையும். நாம் எமக்குத் தெரியாமலே நஞ்சு உணவை உண்கின்றோம்.

இன்று நாட்டில் அபிவிருத்தித் திட்டங்களோ அல்லது வேறு செயற்பாடுகளோ எதுவும் பெரியளவில் இடம்பெறவில்லை. இனப் பிரச்சினையோ, புனர்வாழ்வோ, புனரமைப்போ அல்லது அபிவிருத்தியோ யாவும் கோவைகளில் தான் இருக்கின்றன. இன்று அரசயந்திரத்தில் கோவைக் கலாசாரமே மேலோங்கி உள்ளது.

அலுவலகங்களில் கோவைகளின் தொகைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. ஆயினும் எதுவுமே உருப்படியாக இடம்பெறவில்லை. இன்று முழு நாட்டிலும் யாழ்ப்பாணம் அதன் தனித்துவத்தை இழக்காமல் இருக்கின்றது என்றால் அது இருபது வருட கால யுத்தத்தினால் தான்.

ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது உலக வங்கியோ எமக்குரிய வழிகாட்டல்களைக் காட்டும் என எதிர்பார்ப்பது மடமையாகும். அங்கு பணியாற்றுபவர்களும் அரசுகளின் நிர்வாகிகளாக இருந்தவர்கள் தான். அவர்களால் எதையுமே சாதிக்க முடியாது.

இன்று எமக்குத் தேவையான ஒரு அம்சம் அனுபவப் பொருளாதாரமேயாகும் எனக் குறிப்பிட்டார்.

ஹெறிற்றேஜ் பவுண்டேசன் தென்பகுதியில் விவசாய அபிவிருத்திப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வரும் ஒரு சுயசார்பு நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

---



## சாயி அருளமுதம்

தனிப்பட்டவர்களாகவும், குழுவினராகவும் பலர் சாந்தியையும் சுபீட்சத்தையும் தேடிப் பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்வாரம் போன்ற ஸ்தலங்களுக்கு அதிக பிரயாசையுடன் யாத்திரை மேற்கொள்வதை நாம் காண்கின்றோம். வேறு பலர் திருப்பதி,காசி ஆகிய ஸ்தலங்களுக்கும் செல்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் தமது மிருகக் குணங்களில் சிலவற்றையேனும் கைவிட்டு விட்டார்களா? அதுவே சோதனையாகும். அவர்கள் செலவு செய்த பணத்தையும் நேரத்தையும் பட்ட கஷ்டத்தையும் அதுவே நியாயப்படுத்தும். மிருகம் பிடிக்கப்பட்டு தெய்வீகம் எட்டக் கூடியதாக ஆகும் பொழுது இந்த யாத்திரைகளனைத்தும் தனக்குள்ளேயே இருப்பதை மனிதனால் அறிதியிட்டுக் கூற முடியும். ஒரு கோவிலிலிருந்து இன்னொரு கோவிலுக்குப் போக வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. இந்த வெற்றியை அடையாமல் இராமருடைய அல்லது கிருஷ்ணருடைய அல்லது இறைவனின் இன்னொரு அவதாரத்தினுடைய பக்தன் என்று கூறுவதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

---

## விண்ணப்பம் கோரல்

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையம் கலைமானி சமூக விஞ்ஞான அடிப்படைக் கற்கை நெறி,பொது ஆங்கிலம்,உயர் தொழில் ஆங்கிலம் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இக் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் இம் மாதம் 16ம் திகதியாகும். (உ-54)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்டச் செயலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லை நாவலர் மணி மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இவ்வாரம், ''இந்து சமயக் கிரியைகள்'' என்னும் விடயம் பற்றி ஆனைப்பந்தி வேத சிவாகம குருகுல நிர்வாக உத்தியோகத்தர் சிவஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

## இராணுவ வேலி மீளமைப்பு

(குருநகர்)

பாஷையூர், குருநகர் பகுதிகளில் கடற்கரையோரம் அமைக்கப்பட்டுள்ள இராணுவ வேலிகளை மீளமைப்புச் செய்வதில படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, முட்கம்பிகள் மணமூட்டைகள் மேலதிகமாக இடப்பட்டு மேலும் பலப்படுத்துவதிலும் படையினர் முனைப்புடன் செயற்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்பகுதி மீனவர்கள் மீதான கெடுபிடிகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இதனால் எதிர் காலத்தில் மீனவர்களின் தொழில் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (உ-74)

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குட்டியப்புலம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப1.00மணிக்கு அதிபர் செ.கந்தசாமி தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய கணக்காளர் ந.யோகேந்திரராஜா, வயாவிளான் மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் ஆ.சி.நடராஜா, தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகிழக்கு அரசியல் பொறுப்பாளர் யாழவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

* * *

(மாதகல்)

யா/வட்டு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி.ஆனந்தசங்கரியும் சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும் கௌரவ விருந்தினராக வலிகாமம் கல்வி வலய கணக்காளர் ந.யோகேந்திர ராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். .(உ-56)

## குடாநாட்டு வீதிகளின் பெயர்களில் குழப்பம்

(குருநகர்)

யாழ். பிரதான வீதிச் சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிச் சந்திக்கும் இடையே இருக்கும் முதலாம் குறுக்கு வீதிக்கு பருத்தித்துறை வீதி வேம்படி வீதி என்று இரு வேறு பெயர்களைக் காட்டும் பெயர்ப் பலகைகளை சில மாதங்களாக காணக் கூடியதாக உள்ளது. கொழும்பிலுள்ள ஒரு தனியார் உற்பத்தி, விற்பனை நிலையத்தால் நிறுத்தப்பட்டிருக்கும் மேற்படி பெயர்ப்பலகைகளால் குடா நாட்டு மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

பிரதான வீதிச் சந்தியில் பருத்தித்துறை வீதி என்றும், ஆஸ்பத்திரி வீதிச் சந்தியில் வேம்படி வீதி என்றும் காணப்படுகின்ற பெயர்ப்பலகைகள் அகற்றப்பட்டு அவை சரியான இடங்களில் நிறுத்தப் படவேண்டும் என கருத்துத்தெரிவிக் கப்படுகின்றது. (உ-74)


நேற்று மானிப்பாயில் நடந்த தாக்குதல் சம்பவத்தின் பின் மானிப்பாயப் பகுதி

## நோர்வே தூதரை நாடுகடத்தும் விவகாரம்

# ஜனாதிபதியின் உத்தரவை பிரதமர் புறம்தள்ளினார்

## தேசிய பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை நாட்டை விட்டு வெளியேற்றுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விறகு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டுள்ள போதும், அதனை பிரதமர் நிறைவேற்றாது மௌனம் சாதித்து வருகிறார்.

இவ்வாறு தேசிய பிக்குகள் முன்னணியின் அமைப்பாளர் சந்திரலோக தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

நோர்வேத் தூதுவரான ஜோன் வெஸ்பேர்க்,இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தனி நாடு பிரித்துக் கொடுக்கும் முய ற்சிகளிலேயே முழுமூச்சாக ஈடு பட்டு வருகிறார் என்றும் இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கடந்த 5ம் திகதி கொழும்பு புறக்கோட்டைப் போதி விகாரைக்கு முன்பாக பௌத்த பிக்குகள் முன்னணி நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரி ஆர்ப்பாட்டப பேரணி ஒன்றை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

---

### இராணுவம்...

அப்பட்டமான யுத்தநிறுத்த மீறலாகும் என்று வலியுறுத்திக் கூறினார்.

இச சந்திப்பில் கலந்து கொண்ட வட பகுதி இராணுவக் கட்டளைத் தளபது மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா படையினர் யுத்த நிறுத் ஒப்பந்தத்தை மீறியுள்ளனர் என்பதை ஏற்றுக்கொண்டார்.

இச் சந்திப்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி இரத்தினசபாபதி, 512 பிரிகேட் தளபதி பிரிகேடியர் ரஞ்சித் டீசில்வா,கேணல் செனவிரெடணா ஆகியோரும் புலிகள் தரப்பில் யாழ்மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி உட்பட மேலும் மூன்று புலி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (த)

---

### புலிகளை...

குழுவுக்கு முறையீடு செய்ய முடியும். அதுவே வழமையான நடவடிக்கையும் கூட,

ஆனால் இதற்கு மாறாக படைத்தரப்பு தலைமையகத்தால் வெளியிடப்பட்ட இடுப்புப்பட்டி தொடர்பான தீர்மானம் குறித்து யாழ்ப்பாணம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு தெளிவுபடுத்தியுள்ளதுடன், இடுப்புப்பட்டியின் மாதிரியையும் காண்பித்திருந்தோம். இடுப்புப் பட்டி இராணுவப் பொருள் இல்லை என்பதையும் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர்.

அத்துடன் நேற்று மாலை 3.00மணியளவில் இடுப்புப் பட்டி விவகாரம் குறித்து ஆராயும் முத்தரப்பு சந்திப்பு ஒன்றும் இடம்பெறவிருந்தது. இந்த நிலையிலேயே பெண் போராளிகள் அன்று காலையில் தாக்கப்பட்டனர். மானிப்பாய் வீதியில் எமது பெண் போராளிகள 8 பேரையும் திட்டமிட்ட அடிப்படையில் தயார்படுத்தப்பட்ட கட்டளைகளுக்கு அமைவாக காத்திருந்து வழிமறித்து பொல்லுகள், கம்பிகள், கூரிய கத்திகள் போன்ற ஆயுதங்களால் துப்பாக்கி முன்னிலையில் ஒரு பெண் போராளிக்கு 10 இராணுவத்தினர் வீதம் தாக்கியதுடன் இடுப்புப் பட்டியை பறித்தெடுத்தனர். பொதுமக்களையும் தாக்கினர். இச் சம்பவத்திற்கு ஈ.பி.டி.பி அமைப்பினரும் உடந்தையாக இருந்துள்ளனர்.

இத்தகைய செயலானது சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் எம்மையும், எமது மக்களையும் வேண்டுமென்றே சீண்டி அவமானப்படுத்தி யுத்தத்திற்காக வலிந்திழுப்பதையே வெளிக்காட்டுகின்றது. இதன் மூலம் சமாதானத்திற்கு சாவு மணியடிக்கவே அவர்கள் விளைகின்றனர். சம்பவ இடத்தை யாழ்ப்பாண யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவர் ஓலேபுலாண்டம் பார்வையிட்டதுடன் அங்கு கூடி நின்ற மக்கள் முன்னிலையில் பகீரங்கமான யுத்தநிறுத்த மீறல் என உறுதி செய்தார்.

மேற்படி தாக்குதல் சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் இதில் சம்பந்தப்பட்ட படையினர் அம் முகாமை விட்டு வெளியேற்றப்படுவதுடன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும், இவ்வாறான நிலை தொடருமானால் நாமும் எமது மக்களும் எமது பாதுகாப்பிற்கான தீர்மானங்களை எடுப்பது தவிர்க்க முடியாததாகி விடும் எனவும் கண்காணிப்புக் குழுவிடம்வலியுறுத்திக் கூறினோம் என்றும் இளம்பரிதி மேலும் தெரிவித்தார். (த)

---

### நீர்வேலி...

வாறு, தனது மெய்ப்பாதுகாவலரான பொலிஸாருடன் கதைத்துக் கொண்டிருந்த வேளை பதுங்கி வந்த இனந் தெரியாதோர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்று விட்டதாக ஈ.பி.டி.பியினர் தெரிவித்தனர்.

இத் துப்பாக்கிச் சூட்டின் போது பூ.குணசிங்கம் காற் பாதத்தில் காயமடைந்தார். இச் சம்பவத்தின் போது கதைத்துக் கொண்டிருந்த மெய்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன்ட் சரத் அபயசிங்காவும் காற்பாதத்தில் காயமடைந்ததாக தெரிவிக்கப் படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டபோது பொலிஸ் சார்ஜன் திருப்பிச் சுட்டதாகவும் எனினும் அவர்கள் தப்பி ஒடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாரா்ளுமன்ற உறுப்பினருமான வீ.கே.ஜெகன் கருத்துத் தெரிவிக்கையில் இச் சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவர் மற்றும் அரச தரப்பிற்கு உடனடியாக அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் தமக்கான பொலிஸ் பாதுகாப்பை அதிகரிக்குமாறும் கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (தி)

---

## உலகக் கிண்ணக் கிரிக்கெற்-2003

### இந்தியா எதிர் நெதர்லாந்து

### இந்தியா

48.5 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழப்பு |
|---|---|---|---|
| கங்குலி | 08 | அலப்ரேங் | C |
| டென்டுல்கர் | 52 | டீலீட் | C |
| செவாக | 06 | குளோன்பன்பார்க் | C |
| டிராவிட் | 17 | டீலீட் | B |
| யுவராஜ்சிங் | 37 | ராஜா | C |
| கைவ் | 09 | ராஜா | C |
| மொங்கியா | 42 | | Run.Out |
| ஹர்பஜன்சிங் | 13 | டீலீட் | B |
| அணில்கும்ளே | 09 | | Run.Out |
| சசீர்கான் | 00 | டீலீட் | L.B.W |
| சிறிநாத் | 00 | | Not Out |

உதிரிகள் — 11

### நெதர்லாந்து

48.1 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்கள்

| வீரர்கள் | ஓட்டங்கள | பந்து வீசியவர்கள் | ஆட்டமிழப்பு |
|---|---|---|---|
| குளோபன் பர்க் | 00 | சிறிநாத் | C |
| வான் பன்ஜ் | 62 | சிறிநாத் | B |
| கே.சி. மோல் | 02 | சிறிநாத் | C |
| ஜீடெரென்ற் | 00 | சகீர்கான் | C |
| டீ லீட் | 00 | ஹர்பஜன்சிங் | C |
| வான் ட்ரூஸ்ட் | 01 | கும்ளே | C |
| ஸ்கொட் | 01 | கும்ளே | LBW |
| லெவ்ரோவ் | 03 | கும்ளே | LBW |
| ஹிபேர்லி | 13 | கும்ளே | C |
| ஸ்மித் | 26 | சிறிநாத் | C |
| ராஜா | 00 | | Not Out |

உதிரிகள் — 28

### பந்து வீச்சு - நெதர்லாந்து

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| ஷிபேர்லி | 10 | 49 | 0 |
| லெப்ரோவ் | 09 | 27 | 1 |
| டீலீட் | 9.5 | 35 | 4 |
| குளோபன்பர்க் | 10 | 40 | 1 |
| எ.கே.ராஜா | 09 | 47 | 2 |
| வன்ரூஸ்ற் | 01 | 04 | 0 |

### பந்து வீச்சு - இந்தியா

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| சிறிநாத் | 9.1 | 30 | 4 |
| சகீர்கான் | 08 | 17 | 1 |
| ஹர்பஜன்சிங் | 10 | 20 | 1 |
| கும்ளே | 10 | 32 | 4 |
| கங்குலி | 04 | 14 | - |
| டென்டுல்கர் | 04 | 09 | - |
| செவாக | 03 | 06 | - |

### மானிப்பாய்...

தாக்குதலில் ஈடுபட்டனர்.

**போக்குவரத்து தடைப்பட்டது**

இச் சம்பவங்களை அடுத்து மான்ப்பாய் பிரதான வீதியூடான போக்குவரத்து மக்கள் நடத்திய மறியற் போர் காரணமாக பலமணி நேரம் தடைப்பட்டிருந்ததுடன் அப் பகுதியிலுள்ள வா்த்தக நிலையங்களும் இழுத்து மூடப்பட்டன.

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையீடு**

நேற்று இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி இராணுவத்தின் இத்தகைய அடாவடித்தனமான செயல்கள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் நடவடிக்கையெனத் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் முறைப்பாடு செய்துள்ளார். இதனையடுத்து கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்துள்ளனர்.

. இராணுவத்தால் தாக்கப்பட்ட சம்பவத்தில்; .
தமிழ்த்தென்றல்,கலைமதி, பூமகள், எழிலினி, தமிழினி, யமுனா, கோமகள்,எழில் ஆகிய பெண் போராளிகளே காயமடைந்தவர்களாவர். (ம-4,7,123,201)

### நெடுந்தீவு...

கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையில் விடுதலைப் புலிகள உறுப்பினர்கள் இத்தகைய ஆயுதங்களை திரட்டும் முயற்சியில் இருந்து விலகி சமாதானத்தில முழு அர்ப்பணிப்பையும் காட்டுமாறு அமெரிக்கத் தூதரகம் அந்த அறிக்கையில் வலியுறுத்திக் கேட்டுள்ளது.

இதேவேளை கடந்த வாரம் பேர்ளினில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தையின் போது மனித உரிமைகள் விவகாரம் குறித்து கவனம் செலுத்தியிருப்பதையும் அமெரிக்கத் தூதரகம் பாராட்டியுள்ளது. (ம)

---

## கடலில் மூழ்கி இளைஞன் மரணம்

(தும்பளை)

கற்கோவளம் கடலில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் முழ்கி ம்ரணமடைந்துள்ளார்.

நேற்று மதியம் 1.30 மணியளவில் 8 இளைஞர்கள் இணைந்து கற்கோவளம் கடலில் குளிக்கச் சென்ற வேளை இப் பரிதாப சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தும்பளை கிழக்கைச் சேர்ந்த சபாரத்தினம் நிவாசன் (வயது22) என்ற இளைஞனே மரணமடைந்தவராவர்.

இவரின் சடலம் கரையொதுங் காததையடுத்து இழுவை வலைகள் மற்றும் சுழியோடிகள மூலம் தேடுதல் நடத்தப்பட்ட் போதும் சடலம் கண்டுபிடிக்கப்படவில்லை. (ந-24)

## படையினர் வெளியேற்றம்

(கொடிகாமம்)

கொடிகாமம் பகுதியில் தனியார் வீடுகளில் தங்கியிருந்த படையினர் அவ்வீடுகளை விட்டு வெளி யேறியுள்ளனர்.

கச்சாய் வீதி முதலாம் ஒழுங்கையில் தனியார் வீடுகளில் இருந்த படையினரே வீட்டுரிமையாளர்கள் மீளக் குடியமர விருப்பம் தெரிவித்ததையடுத்து வெளி யேறியுள்ளனர். (உ-40)


# கண்ணீர் அஞ்சலி

அறவழிப் போராட்டக் குழுவின்
தலைவர்
டாக்டர். எஸ்.எஸ்.அருளானந்தம்
மக்கள் வங்கியின் வடவலய
உதவிப் பொதுமுகாமையாளர்
எஸ்.இளம்பிறைநாதன்
ஆகியோரின்
பாசமிகு தந்தையார்

**திருமிகு சுந்தரம் சின்னத்தம்பி**

ஓய்வு பெற்ற ஆசிரியர்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அறவழிப் போராட்டக் குழு
NVDAG

கைதடி நுணாவில்
சாவகச்சேரி


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.